உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முருகன் திருப்புகழ்மாலை

சி. வெங்கடேச சர்மா
தில்லைகட்டி
சுன்னாகம்
509

சுன்னாகம்

குமாரசுவாமிப்புலவர்

மருமகள்

## மு. கமலாம்பிகை அம்மையார்

தொகுத்தது

புலவரகம்:

மயிலணி, சுன்னாகம்

1949

ம பதியப்பட்டது] [விலை ரூபா 1-00

புலவரக வெளியீடு—உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு 1-7-49

ஸ்ரீ சண்முகநாதன் அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பட்டது

உ

# முகவுரை

எண்ணரிய பிறவிகளுள் யாதினும் அரிதாகிய மானிடப் பிறவியை எடுத்த மக்கள் பிறவிப் பெருங் கடலை நீந்த வீடுபேறடைதற்குக் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. வழிபாட்டுக்குரிய தெய்வங்களுள் கலியுகவரதராகிய முருகக் கடவுளே சிறந்தவராவர். அவரை நாம் மனம் வாக்குக் காயங்களினல் மெய் யன்போடு நினைந்தும், துதித்தும், வணங்கியும் அவரது திருவருளைப் பெற முயலல் வேண்டும்.

வாக்கினல் துதிப்பதற்கு அருணகிரிநாதர், நக்கீரர் முதலிய மெய்யடியார்களது அருட்பாடல்கள் மிகச் சிறந்தனவாகும். அவற்றில் நமது சிற்றறிவைக் கொண்டு அறிதற்கரிய தத்துவ ஞானங்களும், உலக நடைக்கும் ஆன்ம லாபத்திற்கும் இன்றியமையாத சன்மார்க்க போதனைகளும், உபாயங்களும் போதிந்து கிடக்கின்றன. அவை சைவநன்மக்கள் ஒவ்வொருவராலும் ஓதி உணரவேண்டிய அரிய நூல்களாகும்.

பரந்துகிடக்கும் அந்த நூல்களுள் பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் சிலவற்றைத் தினமும் பாராயணம் பண்ணும் அன்பர்களுக்கு உபயோகமாகும் பொருட்டுத் தரட்டி 'முருகன் திருப்புகழ்மாலை' என்னும் பெயரோடு வெளியிடப்படுகின்றது. இன்றியமையாத சில பதங்களுக்கும் உரை கூறப்பட்டுள்ளது. எனது சிற்றறிவுக்குப் புலப்படாதவற்றை அறிஞர் திருத்திக்கொள்க. இத் திருப்புகழ்மாலை அன்பர்களுக்கு விரும்பும் பேறுகள் யாவற்றையும் அளிக்கும்வண்ணம் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வழுத்துகின்றேன்.

சுன்னகம்
விரோதி௵
ஆனிமீ 18உ

இங்ஙனம்,
மு. கமலாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


திருமுருகாற்றுப்படை
திருப்பரங்குன்றம் 1
திருச்சீரலைவாய் 4
திருஆவினன்குடி 5
திருவேரகம் 7
குன்றுதோறாடல் 8
பழமுதிர்சோலை 9
தனிவெண்பாக்கள் 12
கந்தர் அலங்காரம் 14
கந்தர் அனுபூதி 20
திருப்புகழ்
விநாயகர்துதி 25
பழநி 26
திருச்செந்தூர் 30
திருப்பரங்குன்றம் 31
சுவாமிமலை 31
பழமுதிர்சோலை 33
குன்றுதோறாடல் 34
கதிர்காமம் 34
காஞ்சீபுரம் 36
திருத்தணி 36
எட்டிகுடி 38
சிதம்பரம் 38
திருவண்ணாமலை 42
திருவாரூர் 45
திருவானைக்கா 46
திருக்காளத்தி 46
காசி 46
இராமேசுவரம் 47





மதுரை 47
திரிசிராப்பள்ளி 49
தஞ்சாவூர் 50
சீகாழி 51
வைத்தீசுவரன்கோயில் 51
திருப்பெருந்துறை 52
உத்தரகோசமங்கை 53
திருமயிலை 53
திருவீழிமிழலை 54
வயலூர் 55
திருச்செங்காடு 57
திருக்குற்றாலம் 57
திருக்கழுக்குன்றம் 58
திருச்செங்கோடு 59
கொடுமுடி 60
விராலிமலை 60
ஊதிமலை 62
விநாயகமலை 63
வள்ளிமலை 63
மயூரகிரி 64
தேவனூர் 64
கருவூர் 65
யாழ்ப்பாணத்து நல்லூர் 66
பொது 67
திருவிசைப்பா 70
முருகன் அர்ச்சனை 71
புராணம் 74
பிள்ளைத்தமிழ் 77
திருவகுப்பு 85
தனிப்பாடல்கள் 87
வாழ்த்து 97
அரும்பதவுரை 98
பாட்டு முதற்குறிப்பகராதி 109


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் புகழ்

அருவமும் உருவுமாய் அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்றசோதிப் பிழம்பாகிய முருகக்கடவுள் சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்று தோன்றியருளினார். சதாசிவ மூர்த்தியே ஐந்து முகங்களோடு அதோமுகமும் உடையராய் ஆறுமுகப்பெருமான் ஆயினர். அவர் சரவணப் பொய்கையில் கார்த்திகைப்பெண்களால் வளர்க்கப்பெற்று உமாதேவியாரால் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஓர் உருவாகிக் கந்தன் என்னும் திருநாமத்தையும் பெற்றார். ஆறுமுகப் பிரானுக்குக் காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன் என்னுந் திருநாமங்களுமுள. ஆறுமுகக்கடவுள் சிவபெருமானின் சக்தியேயன்றி வேறல்லர். சர்வ வியாபகராயும் பிரம விஷ்ணு உருத்திரராயும் நிற்பவர் ஆறுமுகக்கடவுளே.

சிவபெருமானுடைய சுத்தகுணங்களாகிய முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களினீங்குதல்,, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, தம்வயமுடைமை ஆகிய ஆறும் கந்தக்கடவுளினது கருணை வெள்ளம் பொழியும் ஆறு திருமுகங்களாக விளங்குகின்றன, அவருடைய திருக்கரங்களிலுள்ள தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்னும் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரராவர். ஒளிபொருந்திய வேலாயுதம் ஞானசக்தியாக விளங்கும். அவருடைய தேவியராகிய தெய்வநாயகியும் வள்ளிநாயகியும் இச்சாசக்தியும் கிரியாசக்தியுமாவர். அவருடைய வாகனமாகிய மயில் பிரணவ வடிவத்தையும் கொடியாகிய கோழி நாதவடிவத்தையும் குறிக்கும். இதனால் அவர் இச்சாஞானக் கிரியாசொரூபரும் அநாதிமுத்த சித்துருபரும் ஆகிய பரம்பொருளே என்பது நன்கு புலப்படும்.



தேவர்களாகிய ஆன்மாக்களுக்கு அளவிலா இடுக்கண் விளைத்த சூரன், சிங்கன், தாரகன் எனக் கற்பனையாகக் கூறப்படும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மல அரக்கர்களை வேரோடு களைந்து அவ்வான்மாக்களுக்கு முத்திகொடுத்தலே ஞானவடிவினராகிய முருகக் கடவுளுடைய திரு அவதார உண்மையாகும்.

அகத்தியருக்குத் தெய்வத்தமிழைக் கற்பித்த முதற் குரவரும், 'கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழால் பகர்ந்'தவரும், சங்கத் தமிழின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தவரும், குறிஞ்சிக் கடவுளாகிய முருகக்கடவுளே ஆவர்.

இன்னோரன்ன உண்மைகளை எல்லாம் திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய தோத்திர நூல்களைப் படிப்பவர் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

## திருமுருகாற்றுப்படை

### நூல்வரலாறு

இமயமலைச்சாரலில் ஒரு தடாகக் கரையிலுள்ள ஒரு ஆலமர நிழலில் நக்கீரர் சிவபூசை செய்துகொண்டிருக்கும் பொழுது ஆலமரத்திலிருந்து ஒரு இலை பாதி நீரிலும், பாதி நிலத்திலுமாக விழுந்தது. நீரில் விழுந்த பாதி மீனும் நிலத்தில் விழுந்த பாதி பறவையுமாகி ஒன்றையொன்று இழுத்தன. இக் காட்சியைக் கண்டு வியப்படைந்த நக்கீரர் சிவபூசைக் கிரமத்தில் தவறினர். இதற்கு முன்னர் இவ்வாறு தவறிய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரைக் குகைக்குள்ளே அடைத்து வைத்து ஆயிரமாக்குவதற்கு இன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோருவர் வேண்டுமேன்று காத்துக்கோண் டிருந்த பூதம் ஒன்று நக்கீரரையும் பிடித்துக் குகைக்குள் அடைத்தது. பூதம் தனது நியமப்படி அவர்களை உண்ணுவதற்குமுன் நீராடப் போயிற்று. பூதத்திடம் உணவுபெற்று அடைபட்டிருந்த அத்தனை பேரும் நக்கீரர் வரவால் இறப்படையப் போவதாக அவருக்குக் கூறி வருந்தினர். நக்கீரர் மனமுருகி முருகக் கடவுள் பேரில் திருமுருகாற்றுப்படை என்னும் நூலைப் பாட முருகக்கடவுள் தோன்றிப் பூதத்தைக் கோன்று அடைபட்டிருந்த எல்லோரையும் விடுவித்துக் காப்பாற்றினர்.

## அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் இற்றைக்கு நானூற்றைம்பது வருடங்களுக்குமுன் பிரபுடதேவராயன் காலத்தில் திருவண்ணுமலையில் அவதரித்தார். அவர் இளமைப் பருவத்தில் விலைமாதர் கூட்டுறவால் பலவித துன்பங்களையும் அடைந்து வருந்திப் பின்னர் முருகக் கடவுளது திருவருளால் அவை நீங்கப்பெற்று அவரது திருப்புகழைப் பாடும்பணியில் ஈடுபட்டார். அவர் தென்னுட்டிலுள்ள பழநி, திருச்சேந்தூர், வயலூர், திருச்சேங்கோடு, திருவண்ணுமலை முதலிய பல தலங்களுக்குச் சென்று பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் பலவற்றை அருளியுள்ளார். அவை, திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, உடற்கூற்றுவண்ணம், கந்தரந்தாதி ஆதியனவாம். அவர் வில்லிபுத்தூரரோடும் சம்பந்தாண்டாரோடும் வாதஞ்செய்து இருவரையும் தோல்வியுறச் செய்தனர். அருணகிரிநாதர் புரட்டாதி மாசமும் சேவ்வாய்க்கிழமையும் உத்தர நட்சத்திரமும் கூடிய நல் நாளில் முத்தியடைந்தனர் என்ப.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நக்கீரர் அருளிய

# திருமுருகாற்றுப்படை

## 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமம்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செம் சிறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறும் உச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின் றுஎழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறும்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம்கமழ் மருது இணர்கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி
வாழிய பெரிது என்றுஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்



உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்திவெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்றுஎடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம் மலிமறுகில் கூடற் குடவயின்
இரும்சேற்றுஅகல்வயல் விரிந்துவாய்அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்துஉறைதலும்உரியன்;அதாஅன்று,

## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம்வகை அமைபொலம்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவுஇல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே
மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின்உவந்துவரம்கொடுத்தன்றே,ஒரு முகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே,
குறவர்மடமகள் கொடிபோல்நுசுப்பின் [ஒரு முகம்



மடவரல்வள்ளியொடுநகை அமர்ந்தன்றே ஆங்கு அம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசை
அங்குசம்கடாவஒருகை; இருகை [இயதுஒருகை;
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ்தொடியொடு மீமிசைக்கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட; ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறுக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச்சேறலும் நிலைஇயபண்பே; அதாஅன்று

## 3. திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்யாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மெல்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப்புடைக்கும் பல்வரிக்கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து



ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறும் ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளிஇடைத்
தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறைமருங்கில்தம் பெருமுறைகொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவினன்குடிஅசைதலும் உரியன்; அதாஅன்று,

## 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமைநல் யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதாஅன்று,

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூதாளம் தொடுத்த கண்ணியன்
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலைஉடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புஉணத் தொடுத்த பெருந்தண்மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்



கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்புஆர்த்துஅன்ன இன்குரல்தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று,

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துஉடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவிஅப்பி ஐது உரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்கு வில்தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல்அறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர்சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள!



அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டுஅமர் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல்மன் உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும!,நின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புஉடை நன்மொழி அளைஇ விளிவுஇன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறல் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துஉடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உழியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழம்முதிர் சோலை மலைகிழ வோனே.

## தனி வெண்பாக்கள்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்உள்ளத் துறை. (1)

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்குஅமரர் இடர்தீர்த்ததுவும்--இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.



வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. (3)

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல்சூர்தடிந்தகொற்றவா! - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். (4)

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னைஒருவரையான்பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. (5)

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில்அஞ்சல்எனவேல்தோன்றும்--நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். (6)

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடையதண்டைக்கால்எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். (7)

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! — பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண் இரங்காய் இனி. (8)

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு — சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே! அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். (9)

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால் — முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதர்

அருளிய

# கந்தர் அலங்காரம்

### சிவாநந்தப் பேறு

தேனென் றுபாகென் றுவமிக்கொ ணாமொழித் தெய்வவள்ளி
கோன்அன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வான்அன் று, கால்அன் று, தீஅன் று, நீர்அன் று, மண்ணும்அன் று
தான்அன் று,நானன் றசரீரி அன்று, சரீரிஅன்றே.

### தருமம் செய்தலின் அவசியம்

கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்!உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி உண்ண வொட் டாதுங்கள் அத்தம்எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோ?நும் அடிப்பிறகே.

### தமிழின் சிறப்பு

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப் போன்,வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே!

### இரட்சிக்க வேண்டல்

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவ னே!மற வேன்உனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.



### இயமனுக்கு அஞ்சாமை

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்,செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாஅந்த கா!வந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

### சிவயோகிகள் தன்மை

நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு வான்,குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே.

### பெண்ணாசை நீக்கம் வேண்டல்

பால்என் பதுமொழி, பஞ்சென் பதுபதம், பாவையர்கண்
சேல்என் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை
வேல்என் கிலை,கொற் றமயூரம் என்கிலை,வெட்சித்தண்டைக்
கால்என் கிலை,மன மே!எங்ஙனேமுத்தி காண்பதுவே.

### வினைகளினால் விளையும் தீமையைத் தடுக்க உபாயம்

நாள்என் செயும்?வினை தான்என் செயும்?எனை நாடிவந்த
கோள்என் செயும்?கொடுங் கூற்றென் செயுங்?குமரேசர் இரு
தாளுஞ், சிலம்பும், சதங்கையும்?தண்டையும், சண்முகமும்!
தோளும், கடம்பும், எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

### சத்திகளினால் விளையும் நன்மை

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்;தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம்; மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்; அவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேல்அயன் கையெழுத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெண்ணாசை நீக்கம்

பாலே அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண் டுய்யும் வகைஅறி யேன்,மலர்த் தாள்தருவாய்,
காலே மிகஉண்டு காலே இலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும்மாலோன்மருக!செவ் வேலவனே!

### ஆனந்தப்பேறு

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே. (11)

### முத்திவேண்டல்

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்தில் புகட்டிஅன்பாய்
முத்தியை வாங்க அறிகின் றிலேன்,முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னே!வினை யேற்கென் குறித்தனையே?

### அருள்பெறுதார் தன்மை

ஆங்கா ரமும்அடங் கார்.ஒடுங் கார்,பர மானந்தத்தே
தேங்கார், நினைப்பும் மறப்பும் அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ஒளிக் குள்ளே முருகன் உருவங் கண்டு
தூங்கார், தொழும்புசெய் யார்என்செய் வார்யம தூதருக்கே.

### வினைகளினின்று தப்பவழி

சிந்திக்கி லேன்,நின்று சேவிக்கி லேன்,தண்டைச்சிற்றடியை
வந்திக்கி லேன், ஒன்றும் வாழ்த்துகிலேன்,மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்,பொய்யை நிந்திக் கிலேன், உண்மைசாதிக்கிலேன்
புந்திக்கி லேசமும் காயக் கிலேசமும் போக்குத



### முருகக்கடவுள் ஞானகுரு

ஆலுக் கணிகலம் வெண்தலை மாலை, அகிலம்உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்,மயில்ஏறும்ஐயன்
காலுக் கணிகலம் வானோர் முடியும் கடம்பும்,கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

### இயமவாதை நீக்கம் வேண்டல்

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும், கராசலங்கள்
எட்டுங் குலகிரி எட்டும்விட் டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே! (16)

### மலநீக்கம்

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள், மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முரு காஎனும் நாமங்கள், முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும், பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

### முருகனை மறவாதார் பேறு

சேந்தனைக், கந்தனைச், செங்கோட்டு வெற்பனைச், செஞ்சுடர்வேல்
வேந்தனைச், செந்தமிழ் நூல்விரித் தோனை, விளங்குவள்ளி
காந்தனைக்,கந்தக் கடம்பனைக், கார்மயில் வாகனனைச்,
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

### திருவருள்

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல் லாதொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயந் தானே தரும்எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுக வா!சொல் லொணாதிந்த ஆனந்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேலான நிலை

அராப்புனை வேணியன் சேய்அருள் வேண்டும்,அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும், கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும்,மனமும்பதைப்பறல் வேண்டும்,என்றால்
இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே.

### மன உறுதி

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம், படிப்பவர்தாள்
முடிக்கின் றிலை,முரு காஎன் கிலைமுசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலை,பர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலை,நெஞ்ச மே!தஞ்சம் ஏது நமக்கினியே?

### முறையீடு

கோடாத வேதனுக்கு யான்செய்த குற்றமென்? குன்றெறிந்த
தாடாள னே!தென் தணிகைக் குமர!நின் தண்டைஅந்தாள்
சூடாத சென்னியும், நாடாத கண்ணும், தொழாதகையும்,
பாடாத நாவும், எனக்கே தெரிந்து படைத்தனனே.

### இறுதிக்காலத்தில் முருகனே துணை

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல் ஏற்றஞ்சொண் டாடுவீர்காள்!
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு போம்அன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகையும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்?ஐயோ!கெடுவீர் நும் அறிவின்மையே.

### அடைக்கலம் வேண்டல்

மைவருங் கண்டத்தர் மைந்த!கந் தா!என்று வாழ்த்தும் இந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்,கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும், பதியும், கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே.



### முருகன்சிறப்பு

மாலோன் மருகனை, மன்றாடி மைந்தனை, வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை, மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னே அந்த நான்முகனே.

### முத்திநெறிவேண்டல்

கதிதனை ஒன்றையும் காண்கின் றிலேன்கந்தவேல்முருகா!
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன் பாய்நாம் பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேஎன் தன்மனம் வேகின்றதே.

### திருவடிக்கு இரங்கல்

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்,
தூவிக் குலமயில் வாகன னே!துணை ஏதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

### குருதரிசனம்

திருவடி யுந்தண்டை யும்,சிலம் பும்,சிலம் பூடுருவப்
பொருவடி வேலும், கடம்பும், தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள் ஆறும், மலர்க் கண்களும்
குருவடி வாய்வந்தென் உள்ளங் குளிரக் குதிகொண்டவே.

### உலகப்பற்று ஒழிதல்

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்தன்
உள்ளத் துயரை ஒழித்தரு ளாய்,ஒரு கோடிமுத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடற்செந்தில் மேவிய சேவகனே!
வள்ளிக்கு வாய்த்த வனே!மயில் ஏறிய மாணிக்கமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதர்

அருளிய

# கந்தர் அநுபூதி

### காப்பு

செஞ்சக் கனகல்லு நெகிழ்ந்(து) உருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக்(கு) இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரஆனை பதம் பணிவாம். (1)

### முருகக்கடவுளைத் தெளிந்து அறிதல்

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே. (2)

### ஈதற்சிறப்பு

கெடுவாய் மனனே! கதிகேள் கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்,
சுடுவாய், நெடு வேதனை தூள் படவே,
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே. (3)

### அனுக்கிரகம்

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்,
சும்மா இரு, சொல்அற என்றலுமே,
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே. (4)



### உய்யுர்வழி

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய், ஒழிவாய்,
மெய்,வாய் விழி,நாசியொடும் செவிஆம்
ஐவாய்வழி செல்லும் அவாவினையே. (5)

### முருகக்கடவுளின் திருநாமங்கள்

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகுஞ் செயல் தந்து உணர்வுஎன்று அருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ! எண்குண! பஞ்சரனே. (6)

### பேராசையின் பிணிப்பு

பேராசை எனும் பிணியிற் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே! (7)

### அருள்பெறல்

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்,
தாமே பெற வேலவர் தந்ததனல்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாம் ஏன்? நடவீர் நடவீர் இனியே. (8)

### வறுமை எல்லாவற்றையும் ஒழிக்கும்

வடிவும், தனமும், மனமும், குணமும்,
குடியும், குலமும், குடி போகியஆ!
அடி அந்தம் இலா அயில்வேல் அரசே!
மிடிஎன்று ஒருபாவி வெளிப் படினே. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரபஞ்சமோகம்

மெய்யே என வெவ் வினைவாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ, முழுதுஞ்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! (10)

### வாழ்வு மாயைபாற் பட்டது

பாழ் வாழ்வு எனும்இப் படு மாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே,
தாள் வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனிநீ மயில் வாகனனே. (11)

### மாதராசை நீக்கம்

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே!
கங்கா நதி பால! க்ருபா கரனே! (12)

### இயமனினின்றும் இரட்சிப்பு

சாகாது எனையே சரணங்களிலே
கா,கா நமனார் கலகம் செயும்நாள்
வாகா! முருகா! மயில் வாகனனே!
யோகா! சிவஞான உபதேசிகனே! (13)

### அநுபூதி

தூசாம் அணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகள் ஆயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. (14)



### பிரபஞ்சவிசார நீக்கம்

எந்தாயும் எனக்(கு) அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள்
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே! (15)

### தத்துவாதீத நிலை

ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறும் ஆறு உளதோ?
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறுஆ உலகம் குளிர்வித்தவனே! (16)

### குருஅருள் வேண்டல்

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்,
குருவாய், வருவாய், அருள்வாய், குகனே! (17)

### முருகக்கடவுள் அருட்சிறப்பு

விண்ஆள் பதமும் விரிநீர் புடைசூழ்
மண்ஆள் பதமும் மகிழேன், மகிழேன்,
தண்ஆர் அமுதே சயிலப் பகையே
கண்ஆர் உன்அரும் கனியைப் பெறினே. (18)

### திருவடிவணக்கம்

இரவும் பகலும் துதிசெய்து இருதாள்
பரவும் பரிசே பரிசா அருள்வாய்,
கரவுண்(டு) எழுசூர் களையக் கதிர்போல்
விரவும் சுடர்வேல் விடு சேவகனே. (19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இதுவுமது

எந்நேரமும் நின் இருதாள் மலரைப்
பொன்னே எனயான் புனையப்பெறின், என்
அன்னே! அமுதே! அயில்வேல் அரசே!
கொன்னே! பிறவிக் குறை பெற்றிலனே. (20)

### குரு தரிசனம்

பெரியோர் எனினும் புலையோர் எனினும்
சிறியோர் எனினும் தெளிவோர் அவரே,
குறியோர் எனினும் குருவாய் வருவான்
நெறியோ(டு) ஒழுகும் நிலை பெற்றிடினே. (21)

### அடைக்கலம் புகுதல்

எந்நேரம் அதோ தெரியா(து) இறுநாள்
அந்நேரம் அதொன்று ஆகாது என முன்
சொன்னேம் மனனே! துவலோ! துவலோ
தன்நேர் குகனைச் சரண்என்று அடையே. (22)

### இதுவுமது

காடும் மலையும் கடலும் உருளச்
சாடும் தனிவேல் உடையாய் சரணம்,
ஆடும் மயில்வேல் அரசே சரணம்,
பாடும் வர தற்பரனே! சரணம். (23)

### முருகன் அருட்கடவுள்

வாழ்வார் உறவாய் மகிழ்வார் பலரும்
தாழ்வார்க்கு அருள் உத்தமன் நீயலையோ?
பேழ்வாய் அரவும் பிறை வெள்ளிறகும்
சூழ்வார் சடையார்! தொழு தேசிகனே! (24)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதர்

அருளிய

# திருப்புகழ்

### சிறப்புப்பாயிரம்

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் — மோனவீ(டு)
ஏறலாம் யானைக்(கு) இளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேஇக் கூறு. (1)

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில்தோன்றும் — சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால். (2)

## திருப்புகழ்

### விநாயகர் துதி

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி,
கற்றிடும்அடியவர் புத்தியில் உறைபவ!
கற்பகம் எனவினை கடிதேகும்,
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை,
மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே!
முற்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா!
அத்துயர் அதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி,
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம்அருள் பெருமாளே! (1)

## பழநி

### அருள் வேண்டல்

அபசார நிந்தைபட்(டு) உழலாதே,
அறியாத வஞ்சரைக் குறியாதே,
உபதேச மந்திரப் பொருளாலே,
உனைநா(ன்) நினைந்தருள் பெறுவேனோ;
இபமாமு கன்தனக்(கு) இளையோனே!
இமவான்ம டந்தைஉத் தமிபாலா!
செபமாலை தந்தசற் குருநாதா!
திருவாவி னன்குடிப் பெருமாளே! (2)

கருவின்உரு ஆகிவந்து, வயதளவி லேவளர்ந்து,
கலைகள்பல வேதெரிந்து மதனாலே,
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து,
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி,
அரகரசி வாயஎன்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதிஒன்றும் அறியாமல்,
அசனப் இடுவார்கள்தங்கள் மனைகள்தலைவாசல்நின்று
அநுதினமும் நாணம்இன்றி அழிவேனோ?



உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்கர்
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே!
உபயகுல தீபதுங்க! விருதுகவி ராஜசிங்க!
உறைபுகலி யூரில்அன்று வருவோனே!
பரவைமனை மீதில்அன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமன்அரு ளால்வளர்ந்த குமரேசா!
பகைஅசுரர்சேனைகொன்று அமரர்சிறைமீளவென்று
பழநிமலை மீதில்நின்ற பெருமாளே! (3)

அவனிதனி லேபிறந்து மதலைஎன வேதவழ்ந்து,
அழகுபெற வேநடந்து இளையோனாய்,
அருமழலை யேமிகுந்து, குதலைமொழி யேபகர்ந்து,
அதிவிதம தாய்வளர்ந்து, பதினாறாய்,
சிவகலைகள் ஆகமங்கள் மிகவுமறை ஓதும்அன்பர்
திருவடிக ளேநினைந்து, துதியாமல்,
தெரிவையர்களாசைமிஞ்சி, வெகுகவலையாயுழன்று,
திரியும்அடி யேனைஉன்தன் அடிசேராய்,
மவுனஉப தேசசம்பு மதிஅறுகு வேணிதும்பை
மணிமுடியில் மீதணிந்த மகதேவா!
மனமகிழ வேஅணைந்து, ஒருபுறம தாகவந்து,
மலைமகள்கு மார!துங்க வடிவேலா!
பவனிவர வேஉகந்து மயிலின்மிசை யேதிகழ்ந்து
படிஅதிர வேநடந்த கழல்வீரா!
பரமபத மேசெறிந்த முருகன்என வேஉகந்து
பழநிமலை மேல்அமர்ந்த பெருமாளே! (4)

### மூறைபீடு

ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்,
ஆறுமுகம், ஆறுமுகம், என்று,பூதி
ஆகம்அணி மாதவர்கள் பாதமலர் சூடும்அடி
யார்கள்பதமேதுணைய(து) என்று,நாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் வாகன!குகா!சரவ ணா!எனது
  ஈச!என மானம்உற என்றும்ஓதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவில்உனை
  ஏவர்புகழ் வார்மறையும் என்சொலாதே,
நீறுபடு மாழைபொரு மேனியவ! வேல! அணி
  நீலமயில் வாக!உமை தந்தவேளே!
நீசர்கள்த மோடெனது தீவினை எலாமடிய
  நீடுதனி வேல்விடும டங்கல்வேலா!
சீறிவரு மாறவுணன் ஆவிஉ ணும் ஆனைமுக
  தேவர்துணை வா!சிகரி அண்டகூடஞ்
சேரும்அழ கார்பழநி வாழ்குமர னே!பரம!
  தேவர்வர தா!முருக! தம்பிரானே! (5)

**மறுபிறப்பு**

திமிர உததி அனைய நரக
  செனனம் அதனில் விடுவாயேல்,
செவிடு குருடு வடிவு குறைவு
  சிறிது மிடியும் அணுகாதே,
அமரர் வடிவும் அதிக குலமும்
  அறிவு நிறையும் வரவேநின்
அருள தருளி எனையு மனதொ(டு)
  அடிமை கொளவும் வரவேணும்,
சமர முகவெல் அசுரர் தமது
  தலைகள் உருள, மிகவேநீள்
சலதி அலற, நெடிய பதலை
  தகர, அயிலை விடுவோனே!
வெமர அணையில் இனிது துயிலும்
  விழிகள் நளினன் மருகோனே!
மிடறு கரியர் குமர! பழநி
  விரவும் அமரர் பெருமாளே! (6)



**அர்ச்சனை**

நாத விந்துக லாதீ!நமோநம;
  வேத மந்த்ரசொ ரூபா!நமோநம;
  ஞான பண்டித சாமீ!நமோநம, வெகுகோடி
நாம சம்புகு மாரா!நமோநம;
  போக அந்தரி பாலா!நமோநம;
  நாக பந்தம யூரா!நமோநம; பரசூரர்,
சேத தண்டவி னோதா!நமோநம;
  கீதகிண்கிணி பாதா!நமோநம;
  தீர சம்ப்ரம வீரா!நமோநம, கிரிராஜ!
தீபமங்கள ஜோதி! நமோநம;
  தூய அம்பல லீலா!நமோநம;
  தேவ குஞ்சரி பாகா!நமோநம; அருள்தாராய்,
ஈத லும்பல கோலால பூசையும்,
  ஓத லுங்குண ஆசார நீதியும்,
  ஈர முங்குரு சீபாத சேவையும் மறவேனே,
ஏழ் தலம்புகழ் காவேரி யால்விளை
  சோழ மண்டல மீதே மனோகர!
  ராஜ கெம்பிர! நாடாளு நாயக! வயலூரா!
ஆத ரம்பயில் ஆரூரர் தோழமை
  சேர்தல் கொண்டவ ரோடேமு(ன்) நாளினில்
  ஆடல்வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி அந்தஉ லாஆசு பாடிய
  சேரர் கொங்குவை காவூர்நல் நாடதில்
  ஆவினன்குடிவாழ்வானதேவர்கள்பெருமாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செந்தூர்

### திருவடிக்கு அன்பு

வரியார் கருங்கண் மடமாதர்
　　மகவாசை தொந்தம் அதுவாகி,
இருபோது நைந்து மெலியாதே,
　　இருதாளின் அன்பு தருவாயே,
பரிபாலனஞ் செய்து அருள்வோனே!
　　பரமே சுரன்தன் அருள்பாலா!
அரிகே சவன்தன் மருகோனே!
　　அலைவாய் அமர்ந்த பெருமாளே! (8)

### திருவடிக்கு இரங்கல்

விந்ததி னூறி வந்தது காயம்
　　வெந்தது கோடி இனிமேலோ,
விண்டு விடாமல் உன்பதம் மேவு
　　விஞ்சையர் போல அடியேனும்,
வந்துவி நாச முன்கலி தீர
　　வண்சிவ ஞான வடிவாகி,
வன்பதம் ஏறி என்களை ஆற
　　வந்தருள் பாத மலர்தாராய்;
எந்தனுள் ஏக செஞ்சுடர் ஆகி
　　என்கணில் ஆடு தழல்வேணி
எந்தையர் தேடும் அன்பர்ச காயர்
　　எங்கள் சுவாமி அருள்பாலா!
சுந்தர ஞான மென்குற மாது
　　தன்திரு மார்பில் அணைவோனே!
சுந்தர மான செந்திலில் மேவு
　　கந்த சுரேசர் பெருமாளே! (9)



## திருப்பரங்குன்றம்

### தரிசனம்

சந்ததம் பந்தத் தொடராலே
　　சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தன்என்(று) என்றுஉற்(று) உனைநாளும்
　　கண்டுகொண் டன்புற் றிடுவேனோ?
தந்தியின் கொம்பைப் புணர்வோனே!
　　சங்கரன் பங்கிற் சிவைபாலா!
செந்திலங் கண்டிக் கதிர்வேலா!
　　தென்பரங் குன்றிற் பெருமாளே! (10)

### அருள் வேண்டல்

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
　　தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
　　தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ?
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
　　கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே!
கடகபுய மீதிரத்ன மணிஅணிபொன் மாலைசெச்சை
　　கமழுமணம் ஆர்கடப்பம் அணிவோனே!
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
　　சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி, பரகதியு நீகொடுத்து
　　(உ)தவிபுரிய வேணு,நெய்த்த வடிவேலா!
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
　　அரியதமிழ் தான்அளித்த மயில்வீரா!
அதிசமய நேயமுற்ற பழநிமலை மீதுதித்த
　　அழக!திரு வேரகத்தின் முருகோனே! (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவடிக்கிரங்கல்

பாதி மதிநதி போதும் அணிசடை
நாதர் அருளிய குமரேசா!
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா!
காதும் ஒருவிழி காகம் உறஅருள்
மாயன் அரிதிரு மருகோனே!
காலன் எனைஅணு காமல் உனதிரு
காலில் வழிபட அருள்வாயே!
ஆதி அயனொடு தேவர் சுரருல(கு)
ஆளும் வகையுறு சிறைமீளா!
ஆடு மயிலினில் ஏறி அமரர்கள்
சூழ வரவரும் இளையோனே!
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே!
சூரன் உடல்அற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே! (12)

## திருவடிப் பெருவாழ்வு

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனு கமத்தின் விரகாலே
மயலேஎ ழுப்பி இதமேஅ ருத்தி
மயல்போல்மு லைக்குள் உறவாகிப்
பெருகாதல் உற்ற தமியேனை நித்தம்
பிரியாது பட்ச மறவாதே
பிழையேபொ றுத்துன் இருதாளில் உற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே,



குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த
குகனே! குறத்தி மணவாளா!
குளிர்கால்மி குத்த வளர்போதம் உற்ற
குடகாவி ரிக்கு வடபால்வாழ்
திருமால்க னக்கு மருகா!உ மைக்கொர்
சிறுவா!க ரிக்கும் இளையோனே!
திருவேர கத்தில் உறைவாய்! அரக்கர்
சிரமேது ணித்த பெருமாளே! (13)

## ஞானம்

காலனிடத்(து) அணுகாதே, காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேன்அமுதைத் தருவாயே!
மால்அயனுக்(கு) அரியானே! மாதவரைப்பிரியானே!
சோலைமலைக்குஉரியானே! சுவாமிமலைப்பெருமானே!

## பழமுதிர்சோலை

காரணம தாக வந்து புவிமீதே
காலன்அணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே!
ஆரமுதம் ஆன தந்தி மணவாளா!
ஆறுமுகம் ஆறி ரண்டு விழியோனே!
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா!
சோலைமலை மேவி நின்ற பெருமாளே! (15)

## விண்ணப்பம்

வாதினைஅ டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம(து) ஒழிந்து தெளியேனே;
மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம் அணிந்து பணியேனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
    ஆறுமுகம் என்று தெரியேனே;
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட(து)
    ஆடுமயில் என்ப(து) அறியேனே;
நாதமொடு விந்து ஆனஉடல் கொண்டு
    நானிலம் அலைந்து திரிவேனே;
நாகம்அணி கின்ற நாதநிலை கண்டு
    நாடிஅதில் நின்று தொழுகேனே;
சோதிஉணர் கின்ற வாழ்வுசிவம் என்ற
    சோகம் அதுதந்து எனைஆள்வாய்;
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
    சோலைமலைநின்ற பெருமாளே! (16)

## குன்றுதோறாடல்

### அபயம் புகுதல்

அதிருங் கழல்பணிந்துன் அடியேன்உன்
    அபயம் புகுவதென்று நிலைகாண
இதயந்தனில் இருந்து க்ருபைஆகி
    இடர்சங் கைகள்கலங்க அருள்வாயே,
எதிர்அங்(கு) ஒருவர் இன்றி நடமாடும்
    இறைவன் தனதுபங்கில் உமைபாலா!
பதினெங் கிலும்இருந்து விளையாடிப்
    பலகுன் றிலும் அமர்ந்த பெருமாளே! (17)

## கதிர்காமம்

### துதி

திருமகள் உலாவும் இருபுயமு ராரி
    திருமருக நாமப் பெருமாள்காண்,
செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
    தெரிதரு குமாரப் பெருமாள்காண்,



மருவும்அடி யார்கள் மனதில்விளை யாடு
    மரகதமயூரப் பெருமாள்காண்,
மணிதரளம் வீசி அணிஅருவி சூழ
    மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர் மாள
    அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
    அருள்செய்குரு நாதப் பெருமாள்காண்,
இருவினை இலாத திருவினைவி டாத
    இமையவர்கு லேசப் பெருமாள்காண்,
இலகுசிலை வேடர் கொடியின்அதி பார
    இருதனவி நோதப் பெருமாளே! (18)

இறவாமற் பிறவாமல் எனைஆள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே;
குறமாதைப்புணர்வோனே!குகனே!சொற்கமரேசா!
கறையானைக்(கு)இளையோனே!கதிர்காமப்பெருமாளே!

### திருவடிக்கு அன்பு

எதிரி லாத பத்தி தனைமேவி
    இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
    எனது ளேசி றக்க அருள்வாயே;
கதிர காம வெற்பில் உறைவோனே!
    கனக மேரு ஒத்த புயவீரா!
மதுர வாணி உற்ற கழலோனே!
    வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே! (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காஞ்சீபுரம்

#### முறையிடுதல்

அற்றைக் கிரைதேடி அத்தத்திலும் ஆசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ?
வெற்றிக் கதிர்வேலா! வெற்பைத் துளைசீலா!
கற்றுற் றுணர்போதா! கச்சிப் பெருமாளே! (21)

#### அபயம் வேண்டல்

நச்சரவமென்று நச்சரவமென்று
நச்சுமிழ் களங்க மதியாலும்,
நத்தொடு முழங்க னத்தொடு முழங்கு
நத்திரை வழங்கு கடலாலும்,
இச்சைஉணர் வின்றி இச்சைஎன வந்த
இச்சிறுமி நொந்து மெலியாதே,
எத்தனையு நெஞ்சில் எத்தன முயங்கி
இத்தனையில் அஞ்சல் எனவேணும்,
பச்சைமயில் கொண்டு பச்சை மறமங்கை
பச்சைமலை எங்கும் உறைவோனே!
பத்தியுடன் நின்று பத்திசெயும் அன்பர்
பத்திரம் அணிந்த கழலோனே!
கச்சிவர் குரும்பை கச்சவர் விரும்பு
கச்சியில் அமர்ந்த கதிர்வேலா!
கற்பக வனங்கொள் கற்பக விசும்பர்
கைத்தளை களைந்த பெருமாளே! (22)

### திருத்தணி

நினைத்த(து) எத்தனையில் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற்(று) அழியாமல்
கதித்த நித்தியசித்(து) அருள்வாயே;



மனித்தர் பத்தர் தமக்(கு) எளியோனே!
மதித்த முத்தமிழிற் பெரியோனே!
செனித்த புத்திரரிற் சிறியோனே!
திருத்தணிப்பதியிற் பெருமாளே! (23)

#### திருப்புகழின் பயன்

சினத்தவர் முடிக்கும், பகைத்தவர் குடிக்கும்,
செகுத்தவர் உயிர்க்கும், சினமாகச்
சிரிப்பவர் தமக்கும், பழிப்பவர் தமக்கும்,
திருப்புகழ் நெருப்பென்று அறிவோம்யாம்,
நினைத்ததும் அளிக்கும், மனத்தையும் உருக்கும்,
நிசிக்கரு அறுக்கும், பிறவாமல்,
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும்இடிக்கும்,
நிறைப்புகழ் உரைக்குஞ் செயல்தாராய்,
தனத்தன தனத்தந் திமிதிமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண்(டு) எனத்துடி முழக்கும்
தளத்துடன் அடக்கும் கொடுசூரர்
சினத்தையும் உடற்சங் கரித்தமலைமுற்றுஞ்
சிரித்தெரி கொழுத்துங் கதிர்வேலா,
தினைக்கிரிகுறப்பெண் தனத்தினில் சுகித்தொண்
திருத்தணி இருக்கும் பெருமாளே! (24)

கலைமட வார்தஞ் சிலைஅத னாலுங்,
கலவியி னாலுங், கரைமேலே,
கருகிய காளம் பெருகிய தோயம்
கருதலையாலும், சிலையாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைதரு காமன் பலகணை யாலும்,
கொடிஇடை யாள்நின்(று) அயராதே,
குரவணி நீடும் புயமணி நீபங்
குளிர்தொடை நீதந்(து) அருள்வாயே,
சிலைமகள் நாயன் கலைமகள் நாயன்
திருமகள் நாயன் தொழும்வேலா!
தினைவன மானும், கநவன மானும்,
செறிவுடன் மேவுந் திருமார்பா!
தலமகள் மீதெண் புலவர் உலாவுந்
தணிகையில் வாழ்செங் கதிர்வேலா!
தணியவர் கூறுந் தனிகெட நாளுந்
தனிமயில் ஏறும் பெருமாளே!

## எட்டிகுடி (காஞ்சிரங்குடி)

ஓங்கும் ஐம்புல னோடநினைத்தின்(பு) அயர்வேனை
ஓம்பெரும்ப்ரண வாதிஉரைத்தெதன் தனைஆள்வாய
வாங்கி வெங்கணை சூரர்குலக்கொம் புகள்தாவி
வாங்கி நின்றன ஏவில்உகைக்கும் குமரேசா!
மூங்கில் அம்புய வாசமணக்குஞ் சரிமானும்
மூண்ட பைங்குற மாதுமணக்குந் திருமார்பா!
காங்கை யங்கறு மாசின்மனத்தன் பர்கள்வாழ்வே!
காஞ்சி ரங்குடி அறுமுகத்தெம் பெருமாளே!

## சிதம்பரம்

### தரிசனை

இருவினையின் மதிம யங்கித் திரியாதே;
எழுநரகில் உழலு நெஞ்சுற்(று) அலையாதே;
பரமகுரு அருள்நினைந்திட்(டு) உணர்வாலே;
பரவுதரி சனையை என்றெற்(கு) அருள்வாயே;



தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே!
சிவன் அருளும் முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியும் அன்பர்க்(கு) எளியோனே!
கனகசபை மருவு கந்தப் பெருமாளே! (27)

### அன்பு

செங்கலச முலையார்பால் சிந்தைநிலை தடுமாறி
அங்கமிக மெலியாதே, அன்புருக அருள்வாயே,
செங்கைபிடி கொடியோனே! செஞ்சொல்தெரிபுலவோனே!
மங்கைஉமை தருசேயே! மன்றுள்வளர் பெருமாளே!

### திருவடிக்கிரங்கல்

காவிஉ டுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறி,
காய்கனி துய்த்துங் காயம்ஒ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே;
சீவன்ஒ டுக்கம் பூதஒ டுக்கம்
தேற உதிக்கும் பரஞான
தீபவி ளக்கங் காணஎ னக்குன்
சீதள பத்மந் தருவாயே;
பாவநி றத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட உக்கிரந் தருவீரா!
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா!
தூவிகள் நிற்கும் சாலிவ ளைக்கும்
சோலைசி றக்கும் புலியூரா!
சூரர்மி கக்கொண் டாடநடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே! (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதி

கனகசபை மேவும் எனது குருநாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்;
கனகநிற வேதன் அபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்;
வினவும்அடி யாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்;
விதிமுனிவர் தேவர் அருணகிரி நாதர்
விமலசுரர் சோதிப் பெருமாள்காண்;
சனகிமண வாளன் மருகன்என வேத
சதம்மகிழ்கு மாரப் பெருமாள்காண்;
சரணசிவ காமி இரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்;
எனதுமனம் மேவும் அமிர்தகுற மாதொ(டு)
இயல்பரவு காதற் பெருமாள்காண்;
இணையில்இப தோகை மதியின்மக ளோடும்
இயல்புலியுர் வாழ்பொற் பெருமாளே! (30)

திருவடிவேண்டல்

எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்;
இனிஉன(து) அபயம், எனதுயிர் உடலும்
இனிஉடல் விடுக முடியாது;
கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனும் மிகவும் அயர்வானர்;
கடனுள(து) அபயம், அடிமைஉன் அடிமை,
கடுகிஉன் அடிகள் தருவாயே;



விழுதிகழ் அழகி, மரகத வடிவி,
விமலிமுன் அருளும் முருகோனே!
விரிதலம் எரிய குலகிரி நெரிய,
விசைபெறு மயிலில் வருவோனே!
எழுகடல் குமுற அவுணர்கள் உயிரை
இரைகொளும் அயிலை உடையோனே!
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே! (31)

திருவடிக்கு இரங்கல்

இருளும் ஓர்கதிர் அணுகொ ணாதபொன்
இடம தேறி,என் இருநோயும்,
எரிய வே,மலம் ஒழிய வே,சுடர்
இலகு மூலக ஒளிமேவி
அருவிபாய, இன்அமுதம் ஊற,உன்
அருள்எ லாம்என து) அளவாக
அருளி யே,சிவம் மகிழ வேபெற
அருளி யே,இணை அடிதாராய்;
பரம தேசிகர் குருஇ லாதவர்,
பரவை வான்மதி தவழ்வேணிப்
பவள மேனியர், எனது தாதையர்,
பரம ராசியர், அருள்பாலா!
மருவி நாய்எனை அடிமை யாம்என
மகிழ்மெய்ஞ் ஞானமும் அருள்வோனே!
மறைகு லாவிய புலியுர் வாழ்குற
மகள்மெல் ஆசைகொள் பெருமாளே! (32)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வணக்கம்

கைத்தருண சோதி அத்திமுக வேத
கற்பகச கோத்ரப் பெருமாள்காண்;
கற்புசிவ காமி நித்யகலி யாணி
கத்தர்குரு நாதப் பெருமாள்காண்;
வித்துருப ராம ருக்குமரு கான
வெற்றிஅயில் பாணிப் பெருமாள்காண்;
வெற்புளக டாக முட்குதிர வீசு
வெற்றிமயில் வாகப் பெருமாள்காண்;
சித்திரமுகம் ஆறு முத்துமணி மார்பு
திக்கினினி லாதப் பெருமாள்காண்;
தித்திமிதி தீதெ னெத்திவிளை யாடு
சித்திரகு மாரப் பெருமாள்காண்;
சுத்தவிர சூரர் பட்டுவிழ வேலை
தொட்டகவி ராஜப் பெருமாள்காண்;
துப்புவளி யோடும் அப்புலியூர் மேவு
சுத்தசிவ ஞானப் பெருமாளே! (33)

## திருவண்ணாமலை

### முருகக்கடவுள் துதி

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே,
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே,
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே,
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே,
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே,
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே,
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதிஅரு ணாசலம் அமர்ந்த பெருமாளே! (34)



### திருஅருள்வேண்டல்

இரவுபகற் பலகாலும் இயல்இசைமுத் தமிழ்கூறி
திரம்அதனைத் தெளிவாகத் திருஅருளைத் தருவாயே,
பரகருணைப் பெருவாழ்வே! பரசிவதத் துவஞானா!
அரன்அருள்சற் புதல்வோனே! அருணகிரிப் பெருமாளே!

### முறையீடு

இருவர் மயலோ? அமளி விதமோ?
என்என செயலோ? அணுகாத
இருடி அயன்மால் அமரர் அடியார்
இரையும் ஒலிதான் அவைகேளாது,
ஒருவன் அடியேன் அலறும் மொழிதான்
ஒருவர் பரிவாய் மொழிவாரோ?
உனது பததூள் புவன கிரிதான்,
உனது கிருபா கரமேதோ?
பரம குருவாய் அணுவில் அசைவாய்
பவனம் முதலா கியபூதப்
படையும் உடையாய், சகள வடிவாய்,
பழைய வடிவா கியவேலா!
அரியும் அயனோ(டு) அபயம் எனவே
அயிலை அலைமேல் விடுவோனே!
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமாளே! (36)

### தரிசனம்

இருவினை மங்க, மலவகை மங்க,
இருள்பிணி மங்க, மயில்ஏறி,
எனதருள் அன்பு பொழியக டம்பு
எனநித முங்கொண்(டு) அளிபாடக்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிமுகன் தம்பி முருகன்என்(று) அண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்
கருணை பொழிந்து முகமும் மலர்ந்து
கடுகிந டங்கொண்(டு) அருள்வாயே,
திரிபுரம் மங்க, மதன் உடல் மங்க,
திகழ்நகை கொண்டு விடைஏறிச்
சிவவெளி பொங்க அருள்குடி கொண்டு
திகழ்ந டஞ்செய்(து) எமைஆளும்
அரசிஇ டங்கொள் மழுஉடை எந்தை
அமலன்ம கிழ்ந்த குருநாதா!
அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே! (38)

திரிபுரம் அதனை ஒருநொடி அதனில்
எரிசெய்(து) அருளிய சிவன்வாழ்வே!
சினம்உடை அசுரர் மனம்அது வெருவ
அயில்அது முடுகி விடுவோனே!
பருவரை அதனை உருவிட எறியும்
அறுமுகம் உடைய வடிவேலா!
பசலையொ(டு) அணையும் இளமுலை மகளிர்
மதன்விடு பகழி தொடலாமோ?
கரிதிரு முகமும் இடமுடை வயிறும்
உடையவர் பிறகு வருவோனே!
கனதனம் உடைய குறவர்தம் மகளை
கருணையொ(டு)அணையும் மணிமார்பா!
அரவணை துயிலும் அரிதிரு மருக!
அருணையில் உறையும் முருகோனே!
அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அற அருள் உதவு பெருமாளே! (39)



**வறுமை நீக்கம்**

சிவமா துடனே அனுபோ கமதாய்
சிவஞா னமுதே பசியாறித்,
திகழ்வோ(டு) அருவோர் ஒருரூ பமதாய்த்
திசைலோ கம்எலாம் அநுபோகி;
இவனே எனமால் அயனோ(டு) அமரோர்
இளையோன் எனவே மறைஓத,
இறையோன் இடமாய் விளையா டுகவே
இயல்வே லுடன்மா அருள்வாயே!
தவலோ கம்எலாம் முறையோ? எனவே
தழல்வேல் கொடுபோய் அசுராரைத்
தலைதூள் படஏழ் கடல்தூள் படமா
தவம்வாழ் வுறவே விடுவோனே!
கவர்பூ வடிவாழ் குறமா துடன்மால்
கடனும் எனவே அணைமார்பா!
கடைஎன் மிடிதூள் படநோய் விடவே
கனல்மால் வரைசேர் பெருமாளே! (39)

## திருவாரூர்

**திருவடிக்கு இரங்கல்**

நீதான்எத் தனையாலும் நீடுழி க்ருபையாகி.
மாதானத் தனமாக மாஞானக் கழல்தாராய்;
வேதாமைத் துணைவேளே! வீரா!சற் குணசீலா!
ஆதாரத் தொளியானே! ஆரூரிற் பெருமாளே! (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவானைக்கா

### பதிஞானம்

நாடித் தேடித் தொழுவார்பால்
    நானத் தாகத் திரிவேனோ?
மாடக் கூடற் பதி!ஞான
    வாழ்வைச் சேரத் தருவாயே,
பாடக் காதற் புரிவோர்க்குப்
    பாதத் தேனைத் தருவோனே!
ஆடற் தோகைக்(கு) இனியோனே!
    ஆனைக் காவிற் பெருமாளே! (41)

## திருக்காளத்தி

சிரத்தானத்திற் பணியாதே;
    செகத்தோர் பற்றைக் குறியாதே,
வருத்தா மற்றொப் பிலதான
    மலர்த்தாள் வைத்தெத் தனைஆள்வாய்,
நிருத்தா! கர்த்தத் துவநேசா!
    நினைத்தார் சித்தத் துறைவோனே!
திருத்தாள் முத்தற் கருள்வோனே!
    திருக்கா ளத்திப் பெருமாளே! (42)

## காசி

### அருள்வேண்டல்

வேழம்உண்ட விளாங்கனி அதுபோல,
    மேனிகொண்டு வியாபக மயல்ஊறி,
நாளு(ம்)மிண்டர் கள்போல்மிக அயர்வாகி,
    நானு நைந்து விடா(து)அருள் புரிவாயே,
மாளஅன்(று) அமண்நீசர்கள் கழுஏற,
    வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா!
காளகண்டன் உமாபதி தருபாலா!
    காசிகங்கை யில்மேவிய பெருமாளே! (43)



## இராமேஸ்வரம்

### துயர் ஒழிதல்

வானோர் வழுத்துனது பாதா ரபத்மமலர்
    மீதே பணிக்கும் வகை அறியாதே,
மானார் வலைக்கணதி லேதா ளிமெத்தையினில்
    ஊடே அணைத்துதவு மதனாலே,
தேனோ? கருப்பில்எழு பாகோ? இதற்கிணைகள்
    ஏதோ எனக்கலவி பலகோடி,
தீரா மயக்கிநெடு நாகா படத்தில்எழு
    சேருடல் பெற்றதுயர் ஒழியேனோ?
மேல்நா டுபெற்றுவளர் சூரா தியர்க்கெதிரின்
    ஊடே கிறிற்கும்இரு கழலோனே!
மேகா ரவுக்ரபரி தான்ஏ றிவெற்றிபுனை
    வீரா! குறச்சிறுமி மணவாளா!
ஞான பரற்கினிய வேதா கமப்பொருளை
    நாண(து) உரைக்கும்ஒரு பெரியோனே!
நாரா யணற்குமரு கா!வீ றுபெற்றிலகு
    ராமே சுரத்தில்உறை பெருமாளே! (44)

## மதுரை

### முத்தி

ஆனைமுக வற்கு நேர்இளைய சுத்த
    ஆறுமுகம் உற்ற அழகோனே!
ஆதிஅர னுக்கும், வேதமுதல் வற்கும்
    ஆரணம் உரைத்த குருநாதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானவர்கு லத்தை வேல்கொடு துணித்த
சாரசதுர் மிக்க திறல்வீரா!
தாள்இணை கள் உற்று மேவியப தத்தில்
வாழ்வொடுசி றக்க அருள்வாயே!
வான்எழுபு விக்கும் மாலும்அய னுக்கும்
யாவர்ஒ ருவர்க்கும் அறியாத
மாமதுரை சொக்கர் மாது(உ)மைக ளிக்க
மாமயில் நடத்து முருகோனே!
தேன்எழுபு னத்தில் மான்விழிகு றத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா!
தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தைத்
தீரவிடு வித்த பெருமாளே! (45)

நீதத் துவமாகி, நேமத்துணையாகிப்,
பூதத் தயவான போதைத்தருவாயே;
நாதத் தொனியோனே! ஞானக்கடலோனே!
கோதற் றமுதான கூடற்பெருமாளே! (46)

வள்ளமுலைப் பொதுமாதர் மயல்அதனிற் படியாதே
கள்ளம்விடுத் துனதாளே கருதஅருள் பெறுவேனோ?
உள்ள மறைப் பொருளோனே! உமைமகிழ்நற் புதல்வோனே!
தெள்ளுதமிழ்க்(கு) உரியோனே! திருமதுரைப் பெருமானே!

### பதிஞானம்

கலைமேவு ஞானப் பிரகாசக் கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே, பதிஞான வாழ்வைத் தருவாயே;
மலைமேவு மாயக் குறமாதின் மணமேவு வாலக் குமரேசா!
சிலைவேட! சேவற் கொடியோனே! திருவாலவாயிற் பெருமானே!



## திரிசிராப்பள்ளி

### ஞானோபதேசம்

வாசித்துக் காணொ ணாதது,
பூசித்துக் கூடொ ணாதது,
வாய்விட்டுப் பேசொ ணாதது, நெஞ்சினாலே
மாசற்குத் தேரொ ணாதது,
நேசற்குப் பேரொ ணாதது,
மாயைக்குச் சூழொ ணாதது, விந்துநாத
ஓசைக்குத் தூர மானது,
மாகத்துக்(கு) ஈற தானது,
லோகத்துக்(கு) ஆதி ஆனது, கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய்
ஞானத்தைப் போதி யா(ய்)இனி
ஊனத்தைப் போடி டாதும யங்கலாமோ?
ஆசைப்பட்(டு) ஏனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமயல்
ஆகிப்பொற் பாத மேபணி கந்தவேளே!
ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோ(டு)அடர்
ஆரத்தை பூண்ம யூரது ரங்கவீரா!
நாசிக்குட் பிராண வாயுவை
ரேசித்து எட்டாத யோகிகள்
நாடற்குக் காணொ ணாதென நின்றநாதா!
நாகத்துச் சாகை போய்உயர்
மேகத்தைச் சேர்சிரா மலை
நாதர்க்குச் சாமி யேசுரர் பெருமாளே! (49)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அர்ச்சனை

சத்திபாணி! நமோநம, முத்தி ஞானி! நமோநம,
தத்வ ஆதி! நமோநம, விந்துநாத
சத்து ரூபா! நமோநம ரத்ந தீபா! நமோநம,
தற்பர தாபா! நமோ நம, என்றுபாடும்
பத்தி பூணு மலேஉல கத்தின் மானுர் சவா(து) அகில்
பச்சை பாடீ ரபூஷித கொங்கைமேல்வீழ்
பட்டி மாடான நான்உனை விட்டி ராமே உலோகிக
பத்ம சீர்பா தநீஇனி வந்துதாராய்
அத்ர தேவா யுதா!சுர ருக்ர சேனு பதீ!சுசி
அர்க்ய சோமா சியா!குரு சம்ப்ரதாயா!
அர்ச்ச னுவா கனு!வய லிக்குள் வாழ்நா யகா!புய
அட்ச மாலா தரா!குற மங்கைகோவே!
சித்ர கோலா காலா!விர லக்ஷ்மி சாதா! ரதா!பல
திக்கு பாலா! சிவாகம தந்த்ரபோதா!
சிட்ட நாதா! சிராமலை அப்பர் சாமீ! மகாவ்ருத
தெர்ப்பை ஆசா ரவேதியர் தம்பிரானே! (50)

### அநுபூதி

பகல்இரவினிற் தடுமாறு, பதிகுருஎனத் தெளிபோத,
ரகசியம்உரைத் தனுபூதி, ரதநிலைதனைத் தருவாயே,
இகப ரம்அதற்(கு) இறையோனே! இயல்இசையின் முத்தமிழோனே!
சகசி ரகிரிப் பதிவேளே! சரவ ணபவப் பெருமாளே!

## தஞ்சாவூர்

### திருவடிக்கு இரங்கல்

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனே?



விஞ்சுறு மாஉன(து) அடிசேர,
விம்பம தாய்அருள் அருளாயோ?
நஞ்(சு)அமு தாஉ(ண்)ணும் அரனார்தம்
நன்கும ரா!உமை அருள்பாலா!
தஞ்சென வாம்அடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே! (52)

## சீர்காழி

சிந்துற்றெழு மாமதி அங்கித் திரளாலே,
தென் றல்தரு வாசமி குந்துற்(று) எழலாலே,
அந்திப்பொழு தாகிய கங்குல் திரளாலே,
அன்புற்றெழு பேதைம யங்கித் தனியானள்,
நந்துற்றிடு வாரியை மங்கத் திகழாயே,
நஞ்சொத்தொளிர் வேலினை உந்திப் பொருவேளே!
சந்தக்கவி நூலினர் தஞ்சொற்(கு) இனியோனே!
சண்பைப்பதி மேவிய கந்தப் பெருமாளே! (53)

## வைத்தீசுவரன் கோயில்

### சிவஞானம்

எத்தனை கோடி கோடி விட்டுடல் ஓடி ஆடி
எத்தனை கோடி போன(து) அளவேதோ?
இப்படி மோகபோகம் இப்படி ஆகிஆகி
இப்படி ஆவதேது, இனிமேல்யோ
சித்திடில், சீசிசீசி குத்திர மாய மாயை
சிக்கினில் ஆயு(ம்)மாயும் அடியேனைச்;
சித்தினில் ஆடலோடு முத்தமிழ் வாணர்ஓது
சித்திர ஞானபாதம் அருள்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தமும் ஓதுவார்கள் சித்தமெ வீடதாக
நிர்த்தம(து) ஆடும்ஆறு முகவோனே!
நிட்கள ரூபர்பாதி பச்சுரு ஆனமூணு
நெட்டிலை சூலபாணி அருள்பாலா!
பைத்தலை நீடும்ஆயி ரத்தனை மூதுபீறிப்
பற்றிய சாடிவீசு மயில்வீரா!
பச்சிள பூகபாளை செக்கயல் தாவுவேளூர்
பற்றிய மூவர்தேவர் பெருமாளே! (54)

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறிது ஓதத் தெரியாது;
மரத்துறை போலுற்(று) அடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ?
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற்(று) அருள்வோனே!
வரத்துறை நீதர்க்(கு) ஒருசேயே!
வயித்திய நாதப் பெருமாளே! (55)

## திருப்பெருந்துறை

தவப்ரியங் கொளுமுனி வரர்வானோர்
தழைக்கவந் தருள்புரி முருகோனே!
உவப்புறுங் குறமகள் மணவாளா!
ஒருத்தலின் சுதைபுணர் திருமார்பா!
அவத்தன் என்று எனைவிடல் அழகாமோ?
அசட்டுமங் கையர்மயல் தவிராயோ?
சிவப்பரம் பொருள்உத வியபாலா!
திருப்பெருந் துறைஉறை பெருமாளே! (56)



## உத்தரகோசமங்கை

வெற்பென வேளழுந்து செப்பென வேதிரண்டு
மெத்தென மோடிகொண்ட தனமாதர்
மெய்ப்படு கோலமுங்கண் மைப்படு சாலமுஞ்செய்
வித்தையு மேநினைந்து மயலாகி
அற்பக லாஅலைந்து கற்பதெ லாம்உலைந்துள்
அற்பமும் மானம்இன்றி அழிவேனோ?
அக்கினி ரூபமைந்த! கிர்த்திகை மாதர்தந்த
அற்புத பாலைஉண்ட குமரேசா!
பொற்பதி காவ(ல்)இந்தி ரற்குற வேல்எறிந்து
பொய்ப்படு சூர்பிளந்த அதிதீரா!
புட்பதி ஏறுகொண்டல் அச்சுத னார்மகிழ்ந்த
புத்தமிர் தானசெஞ்சொல் மருகோனே!
உற்பல மோகொடுங்க ணைக்கிணை யோ?எனுங்கண்
உத்தமி தேவதந்தி புணர்மார்பா!
உத்தம மாவளங்கொள் உத்தர கோசமங்கை
உற்றினி தாவிருந்த பெருமாளே! (57)

## திருமயிலை

அயில்ஒத் திடும்இரு விழியாலே,
அமுதொத் திடும்அரு மொழியாலே,
சயிலத்(து) எழுதுணை முலையாலே.
தடையுற்(று) அடியனும் மடிவேனோ?
கயிலைப் பதிஅரன் முருகோனே!
கடலக் கரைதிரை அருகேசூழ்
மயிலைப் பதிதனில் உறைவோனே!
மகிமைக்(கு) அடியவர் பெருமாளே! (58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்இ லாஅதி பாதக வஞ்சத் தொழிலாலே,
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற்(று) இளையாதே,
திறல்கு லாவிய சேவடி வந்தித்(து) அருள்கூடத்
தினமு மேமிக வாழ்வு றும் இன்பைத் தருவாயே,
விறல்நி சாசரர் சேனைகள் அஞ்சப் பொரும்வேலா!
விமல மா(து)அபி ராமித ருஞ்சற் புதல்வோனே!
மறவர் வாள்நுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா!
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே! (59)

## திருவீழிமிழலை

### பிறவி வேண்டாமை

எருவாய் கருவாய் தனிலே உருவாய்
இதுவே பயிராய் விளைவாகி,
இவர்போய் அவராய் அவர்போய் இவராய்,
இதுவே தொடர்பாய் வெறிபோல,
ஒருதாய் இருதாய் பலகோ டியதாய்
உடனே அவமாய் அழியாதே.
ஒருகால் முருகா! பரமா! குமரா!
உயிர்கா எனஓ(து) அருள்தாராய்,
முருகா! எனஓர் கரம்ஓ(து) அடியார்
முடிமேல் இருதாள் அருள்வோனே!
முனிவோர் அமரோர் முறையோ? எனவே
முதுசூர் உரம்மேல் விடும்வேலா!
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா! திருமால் மருகோனே!
செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே! (60)



## வயலூர்

### அருள் வேண்டல்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்,
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலைஎன மகிழாதே,
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே!
குருந்தில் ஏறுங் கொண்டலின் மருக!பொன் வயலூரா!
குரங்கு (உ)லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா!
திருந்த வேதந் தண்தமிழ் தெரிதரு புலவோனே!
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமாளே.

### சுதந்தரமின்மை

என்னால் பிறக்கவும், என்னால் இறக்கவும்,
என்னால் துதிக்கவும், கண்களாலே
என்னால் அழைக்கவும், என்னால் நடக்கவும்,
என்னால் இருக்கவும், பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும், என்னால் முசிக்கவும்,
என்னால் சலிக்கவும், தொந்தநோயை
என்னால் எரிக்கவும், என்னால் நினைக்கவும்,
என்னால் தரிக்கவும், இங்குநான்ஆர்?
கல்நார் உரித்தஎன் மன்னா! எனக்குநல்
கர்ணா மிர்தப்பதந் தந்தகோவே!
கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ!
கண்ணா டியில்தடங் கண்டவேலா!
மன்னான தக்கனை முன்நாள் முடித்தலை
வன்வா ளியிற்கொளுந் தங்கரூபன்
மன்னா! குறத்தியின் மன்னா! வயற்பதி
மன்னா! மூவர்க்கொரு தம்பிரானே! (62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினால் விரகுசெய் மடமாதர்,
கனத்த மோகனமதில் மருளாதே;
ஒருத்தன் நான் உனதிரு அருளாலே,
உனக்கு நான் அடிமைகள் புகுவேனோ?
பருத்ததோ கையில்வரு முருகோனே!
பரக்கவே அயில்எறி வயலூரா!
திருத்தமா தவர்பணி குருநாதா!
திருக்கைவேல் அழகிய பெருமாளே! (63)

மைச்ச ரோருக நச்சு வாள்விழி
மானா ரோடே நான்ஆர்? நீயார்? எனுமாறு,
வைத்த போதக சித்த யோகியர்
வாணாள் கோணாள் வீணாள் காணார் அதுபோலே
நிச்ச மாகவும் இச்சை ஆனவை
நேரே தீரா ஊரே பேரே பிறவேஎன்
நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே,
மிச்ச ரோருக வச்ர பாணியன்
வேதா! வாழ்வே! நாதா! கீதா! வயலூரா!
வெற்பை ஊடுரு வப்ப டாவரு
வேலா! சீலா! பாலா! காலா யுதமாளி
பச்சை மாமயில் மெச்ச ஏறிய
பாகா! சூரா! வாகா! போகா தெனும்வீரா!
பட்டி ஆள்பவர் கொட்டி ஆடினர்
பாரூ ராசூழ் பேரூ ராள்வார் பெருமாளே! (64)



## திருச்செங்காடு

### திருவடிக்கிரங்கல்

பந்தாடி அங்கை நொந்தார்ப ரிந்து
பைந்தார்பு னைந்த குழல்மீதே,
பண்பார்சு ரும்பு பாண்பாடு கின்ற
பங்கேரு கங்கொள் முகமீதே,
மந்தார மன்றல் சந்தார மொன்றி
வன்பாத கஞ்செய் தனமீதே,
மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து
மங்காமல் உன்தன் அடிதாராய்;
கந்தாஅ ரன்தன் மைந்தா!வி ளங்கு
கண்ணா!மு குந்தன் மருகோனே!
கண்டோர்பு கழ்ந்த நன்கார்ம டந்தை
கந்தா!அ ரம்பை மணவாளா!
செந்தாத டர்ந்த கொந்தார்க டம்பு
திண்தோள்நி ரம்ப அணிவோனே!
திண்கோட டர்ந்த வெண்கோடு தங்கு
செங்காட மர்ந்த பெருமாளே! (65)

## திருக்குற்றாலம்

வேதத்திற் கேள்விஇ லாதது
போதத்திற் காணஒ ணாதது
வீசத்தில் தூரம்இ லாதது கதியாளர்
வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காயஒ ணாதது
வேகத்துத் தீயில்வெ காதது சுடர்கானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறும்
மாயத்திற் காயம தாசல
தீதற்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி அருள்வாயே,
காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணார்,
காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே!
கோதைப்பித் தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே!
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலம்உ லாவிய பெருமாளே! (66)

## திருக்கழுக்குன்றம்

வேதவெற்பி லேபுனத்தில் மேவிநிற்கும் அபிராம!
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்கு மாறிரட்டி புயநேய!
ஆதரத்தொ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே,
காதுமுக்ர வீரபத்ர காளிவெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலருட்சொ லுமையாள்பால்
ஓதிவைத்த தாதைகற்க ஓதுவித்த குருநாதா!
ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே!



## திருச்செங்கோடு

அன்பாக வந்து நின்தாள்ப ணிந்து
ஐம்பூதம் ஒன்ற நினையாமல்
அன்பால்மி குந்த நஞ்சாரு கண்கள்
அம்போரு கங்கள் முலைதானும்
கொந்தேமி குந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்,
கொண்டேநி னைந்து அன்பேதும் இன்றிக்
குன்றாமல் உன்தன் அருள்தாராய்
மன்றாடி தந்த மைந்தா!மி குந்த
வம்பார்க டம்பை அணிவோனே!
வந்தேப ணிந்து நின்றார்ப வங்கள்
அன்றேக வர்ந்த வடிவேலா!
சென்றேஇ றைஞ்ச கந்தா!என் முன்பு
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்சம் ஒன்றாய்வ ளர்ந்த
செங்கோ டமர்ந்த பெருமாளே! (68)

## திருவடிக்கு அன்பு

புற்புதமெ னாம அற்பநிலை யாத
பொய்க்குடில்கு லாவு மனையாளும்,
புத்திரரும் வீடு மித்திரரும் ஆன
புத்திசலி யாத பெருவாழ்வு
நிற்பதொரு கோடி கற்பமென மாய
நிட்டையுடன் வாழும் அடியேன்யான்;
நித்தநின தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும்வகை ஓத நினைவாயே;
சற்பகிரி நாத! முத்தமிழ்வி நோத!
சக்ரகதை பாணி மருகோனே!
தர்க்கசமண் மூகர் மிக்ககழு ஏற
வைத்த ஒரு காழி மறையோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்புவழு வாது வெற்(பு) அடியின் மேவு
கற்றைமற வாணர் கொடிகோவே!
கைத்தஅசு ரேசர் மொய்த்தகுல கால!
கற்பதரு நாடர் பெருமாளே! (69)

## கொடுமுடி

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட்(டு)அ லையப் புகுதாதே,
திருஅருட் கருணை ப்ரபையாலே
திரம்எனக் கதியைப் பெறுவேனோ?
அரிஅயற்(கு)அ றிதற்(கு) அரியானே!
அடியவற்(கு) எளிஅற் புதநேயா!
குருஎனச் சிவனுக்(கு) அருள் போதா!
கொடுமுடிக் குமரப் பெருமாளே! (70)

## விராலிமலை

### சிவயோகம்

ஐந்து பூதமும், ஆறு சமயமும்,
மந்த்ர வேதபு ராண கலைகளும்,
ஐம்ப தோர்வித மான லிபிகளும், வெகுரூப!
அண்டர் ஆதிச ராசர மும்உயர்
புண்ட ரீகனும், மேக நிறவனும்,
அந்திபோ லுருவானும், நிலவொடுவெயில்கானும்
சந்த்ர சூரியர் தாமும் அசபையும்,
விந்து நாதமும், ஏக வடிவம்(அ)
தன்சொ ரூபம தாக உறைவது சிவயோகம்;
தங்கள் ஆணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ரதாயமொ(டு) ஏயுநெறியது பெறுவேனோ?



வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி
வன்கண் வீரிபி டாரி அரகர
சங்க ரா!என மேரு கிரிதலை
மண்டு தூள்எழ வேலை உருவிய வயலூரா!
வெந்த நீறணி வேணி இருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகல் முறைகூறும்
விண்டு மேல்மயில் ஆட இனியகள்
உண்டு கார்அளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலைஉறை பெருமாளே!(71)

### திருவடிக்கன்பு

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவைசெயுமுக மலர்ஆறும்
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளும் நீளும் வரிஅளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்,
ஆராத காதல் வேடர் மடமகள்
சீமூதம் ஊர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்,
ஆராயும் நீதி வேலு மயிலுமெய்
ஞானபி ராம சோதி வடிவமும்,
ஆபாதனேனும்நாளும் நினைவது பெறவேணும்,
ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி ஆடும் இறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொருள் அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாய ஊமர் போல வணிகரில்
ஊடாடி ஆல வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர! வரதர குருநாதா!
கூர்ஆழி யால்முன் வீய நினைபவன்
ஈடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேயம் உளதிரு மருகோனே!
கோடாமல் ஆர வார அலைஎறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலைஉறை பெருமாளே!

## ஊதிமலை

### அருள்வேண்டல்

ஆதிமக மாயி அம்மை தேவசிவ னார்மகிழ்ந்த
ஆவுடைய மாது தந்த குமரேசா!
ஆதரவ தாய்வ ருந்தி ஆதிஅரு ணேசர் என்று
ஆளும்உனை யேவ ணங்க அருள்வாயே,
பூதமது ஆன ஐந்து பேதமிட வேஅலைந்து,
பூரணசி வாகமங்கள் அறியாத,
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநினைந்து,
போகம்உற வேவி ரும்பும் அடியேனை,
நீதயவ தாய்இ ரங்கி நேசஅரு ளேபு ரிந்து,
நீதிநெறி யேவி ளங்க உபதேச
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேதமந்த்ர
நீலமயில் ஏறி வந்த வடிவேலா!
ஓதுமறை ஆக மஞ்சொல் யோக மதுவே புரிந்து
ஊழிஉ ணர் வார்கள் தங்கள் வினைதீர,
ஊனும்உயி ராய்வ ளர்ந்து ஓசைஉடன் வாழ்வுதந்த
ஊதிமலை மீது (உ)கந்த பெருமாளே! (73)



## விநாயகமலை

### அர்ச்சனை

சரவண ஜாதா! நமோநம, கருணைய தீதா! நமோநம,
சததள பாதா! நமோநம, அபிராம!
தருணச காயா! நமோநம, நிருபநல் வீரா! நமோநம,
சமதள ஊரா! நமோநம, சகதீச!
பரமசொ ரூபா! நமோநம, சுரபதி பூபா! நமோநம,
பரிமள நீபா! நமோநம, உமைகாளி,
பகவதி பாலா! நமோநம, இகபர மூலா! நமோநம,
பவருஷ சீலா! நமோநம, அருள்தாராய்;
இரவியும் ஆகா சபூமியும் மதியமும், வாழ்வா கவானவர்
எவர்களும் ஈடே ற,ஏழ்கடல் முறையோ?என்(று)
இடர்பட, மாமே ருபூதர மிடிபடவேதா, நிசாசர
இகல்கெட, மாசே னைமேல்அயில் விடுவோனே!
மரகத ஆகார வாயனும் இரணிய ஆகார வேதனும்
வசுஎனும் ஆகா ராசனும் அடிபேண,
மயிலுறை வாழ்வே! விநாயக மலைஉறை வேலாமகீதர!
வனசரர் ஆதா ரம்ஆகிய பெருமாளே! (74)

## வள்ளிமலை

அல்லிவிழி யாலும் முல்லை நகை யாலும்
அல்லல்பட ஆசைக் கடலீயும்,
அள்ளஇனி தாகி நள்இரவு போலும்
உள்ளவினை ஆரத் தனமாரும்,
இல்லும்இளை யோரும் மெல்லஅய லாக
வல்எருமை மாயச் சமனும்,
எள்ளிஎன (து) ஆவி கொள்ளை கொளு நாளில்
உய்யஒரு நீபொற் கழல்தாராய்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைமறை தேடி இல்லைஎனு நாதர்
சொல்லும் உபதேசக் குருநாதா!
துள்ளிவிளை யாடு புள்ளிஉழை மேவு
வெள்ளிவன மீதுற்(று) உறைவோனே!
வல்அசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே!
வள்ளி படர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளி மணவாளப் பெருமாளே! (75)

## மயூரகிரி

தவள மதியம் எறிக்குந் தணலாலே;
சரச மதனன் விடுக்கும் கணையாலே,
கவன மிகவும் உரைக்கும் குயிலாலே,
கருதி மிகவு மயக்கம் படவோநான்
பவள நிகரும் இதழ்ப்பைங் குறமானின்
பரிய வரையை நிகர்க்குந் தனமேவும்
திவளு மணிகள் கிடக்கும் திருமார்பா!
திகழு மயிலின் மலைக்கண் பெருமாளே! (76)

## தேவனூர்

### வணக்கம்

காணொணாதது, உருவோ(டு) அருவது,
பேசொணாதது, உரையே தருவது,
காணு நான்மறை முடிவாய் நிறைவது, பஞ்சபூதக்
காய பாசம தனிலே உறைவது,
மாய மாய்உடல் அறியா வகையது,
காய மானவர் எதிரே அவரென வந்துபேசி



பேணொணாதது, வெளியேய் ஒளியது,
மாயனார்அயன் அறியா வகையது,
பேதபேதமொ டுலகாய் வளர்வது, விந்துநாதப்
பேறு மாகலை துரியா துரியவ
தீத மானது, வினையேன் முடிதவப்
பேறு மாயருள் நிறைவாய் விளைவது, ஒன்றநீயே,
வீணொணாதென அமையா தசுரரை
நூறி யேஉயிர் நமனீ கொளுஎன
வேல்கடாவியகரனே!உமைமுலைஉண்டகோவே
வேத நான்முக மறையோ னொடும்விளை
யாடி யேகுடுமியிலே கரமொடு
வீரமோதின அழகா! குறவர்கு றிஞ்சிஊடே
சேணொ ழியிடும் இதண்மேல் அரிவையை
மேவி யேமயல் கொளலீலைகள்செய்து
சேர நாடிய திருடா! அருள்தரு கந்தவேளே!
சேரொ ணாவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிகள் உளமே உறைதரு
தேவனூர்வரு குமாரா! அமரர்கள் தம்பிரானே!

## கருவூர்

மதியால் வித்தகனாகி, மனதால்உத் தமனாகிப்,
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே;
நிதியே!நித் தியமே!என் நினைவே!நற் பொருளாயோய்!
கதியே!சொற் பரவேளே! கருவூரிற் பெருமாளே!(78)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்து நல்லூர்

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமும் மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்,
போற்றாய் நாளுங் கைப்பொருள் உடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியினர் அமுதூறல்
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை இடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமதம் அகிலாரும்
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டனன் உனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ?

ஆத்தாள் மால்தங் கைச்சிக ணிகைஉமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவனேசை
ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவன் திருவிளை
யாட்டால் ஈசன் பக்கமதுறைபவள் பெறுசேயே,
ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பாராயுஞ்சொற்றமிழருள்தருமுருகோனே!
ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணயன் பட்டின மருவிய பெருமாளே!



## பொது

### தரிசனம்

பிறவிஅலை ஆற்றினிற் புகுதாதே,
பிரகிருதி மார்க்முற்(று) அலையாதே,
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே,
உனதுபத காட்சியைத் தருவாயே,
அறுசமய சாத்திரப் பொருளோனே!
அறிவுளறி வார்க்குணக் கடலோனே!
குறுமுனிவன் ஏத்துமுத் தமிழோனே!
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே! (80)

இத்தரணி மீதிற் பிறவாதே;
எத்தரொடு கூடிக் கலவாதே;
முத்தமிழை ஓதித் தளராதே;
முத்திஅடி யேனுக்(கு) அருள்வாயே;
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா!
சத்தசொரு பா!புத் தமுதோனே!
நித்யக்ரு பாநற் பெருவாழ்வே!
நிர்த்த ஜெகசோதிப் பெருமாளே! (81)

### முத்தி

பத்தியால் யான்உனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி,
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்(கு) அருள்வாயே;
உத்தமா தானசற் குணர்நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா!
வித்தகா! ஞானசத் திநிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே! (82)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் இயல்சொற்கனிமாதர்சேவைதனைக்கருதாதே
யான்எனதற்றிடுபோதம் யானறிதற்கருள்வாயே;
வானவருக்(கு)அரசான வாசவனுக்கினியோனே!
ஆனைமுகற்(கு) இளையோனே! ஆறுமுகப் பெருமாளே!

துள்ளுமத வேள்கைக் கணையாலே,
    தொல்லைநெடு நீலக் கடலாலே,
மெள்ளவரு சோலைக் குயிலாலே,
    மெய்உருகு மானைத் தழுவாயே;
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே!
    செய்ய குமரேசத் திறலோனே!
வள்ளல்தொழு ஞானக் கழலோனே!
    வள்ளிமண வாளப் பெருமாளே! (84)

இசைந்த ஏறுங், கரிஉரி போர்வையும், எழில்நீறும்,
    இலங்கு நூலும், புலிஅதள்ஆடையும், மழுமானும்,
அசைந்த தோடும், திங்களும் மாலையும், முடிமீதே
    அணிந்த ஈசன் பரிவுடன் அருளிய குருநாதா!
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே!
    உகந்த பாசக் கயிறொடு தூதர்கள் நலியாதே,
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
    அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே!
கலந்த மாதும் கண்களி உறவரு புதல்வோரும்,
    கலங்கி டாரென்(று) இன்பமு றுலகிடை கவிமேவி
உலந்தகாயங் கொண்டுளம் உறுதுயர் உடன்மேவாது
    உகந்த பாதந் தந்துனை உரைசெய அருள்வாயே,
மலர்ந்த பூவின் மங்கையை மருவரி மருகோனே!
    மறஞ்செய் வார்தம் வஞ்சியை மருவிய மணவாளா!
சிலம்பினோடுங் கிண்கிணி திசைதொறும் ஒலிவீசச்
    சிவந்த காலுங், தண்டையும் அழகிய பெருமாளே!



மனைமக்கள் சுற்றம் எனுமாயா
    வலையைக்கடக்க அறியாதே
வினையிற்செருக்கி அடிநாயேன்
    விழலுக்கிறைத்து விடலாமோ?
சுனையைக்கலக்கி விளையாடு
    சொருபக்குறத்தி மணவாளா!
தினநற்சரித்திரம் உளதேவர்!
    சிறைவெட்டி விட்ட பெருமாளே! (87)

காதி மோதிவா தாடு நூல்கற் றிடுவோரும்
    காசு தேடிஈ யாமல் வாழப் பெறுவோரும்,
மாது பாகர்வாழ் வே!எ னெக் குருகாரும்,
    மாறி லாதமா காலன் ஊர்புக்கு அலைவாரே!
நாத ரூப!மா நாதர் ஆகத்(து) உறைவோனே!
    நாக லோகம் ஈரேழு பாருக்(கு) உரியோனே!
தீதி லாத வேல்வீர! சேவற் கொடியோனே!
    தேவ தேவ! தேவாதி தேவப் பெருமாளே! (88)

பொன்னை விரும்பிய பொதுமாதர்
    புன்மை விரும்பியெ தடுமாறும்
என்னை விரும்பிநி ஒருகால்நின்
    எண்ணி விரும்பவும் அருள்வாயே;
மின்னை விரும்பிய சடையாளர்;
    மெய்யின் விரும்பிய குருநாதா!
அன்னை விரும்பிய குறமானை;
    அண்மி விரும்பிய பெருமாளே! (89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சேந்தனார்

அருளிய

## திருவிசைப்பா

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலம்முழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லியல் இவளே! (1)

பரிந்தசெஞ் சுடரோ? பரிதியோ? மின்னோ?
பவளத்தின் குழவியோ? பசும்பொன்
சொரிந்த சிந்துரமோ? தூமணித் திரளோ?
சுந்தரத்து அரசிது என்னத்
தெரிந்தவை நிகர்வாழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொன்
மையல்கொண்டு ஐயுறும் வகையே. (2)

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவலற் சேனை என்னக்காப் பவனென்
பொன்னைமே கலைகவர் வானே
தேவிநல் தலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநல் பீலி மாமயில் ஊருஞ்
சுப்பிர மண்ணியன் தானே. (3)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## முருகன் அர்ச்சனை
## 108

### புராணமும் பிறவும்

ஆறு இரு முகங்கள் போற்றி; முகம்பொழி கருணை போற்றி;
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி; காஞ்சி
மா அடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி; அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி; போற்றி;

பன்னிரு கரத்தாய் போற்றி; பசும்பொன்மா மயிலாய்; போற்றி;
முன்னிய கருணை ஆறு முகப்பரம் பொருளே, போற்றி;
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே! போற்றி;
என் இரு கண்ணே! கண்ணுள் இருக்குமா மணியே! போற்றி;

உலகத்தின் முதலாய் நின்ற ஒருதனிப் பொருளே! போற்றி;
கலைகட்கும் உணர ஒண்ணாக் கருணைவா ரிதியே! போற்றி;
மலைவிற்கைப் பெருமான் கண்ணில் வந்தமா மணியே! போற்றி;
புலமைக்குத் தலைமை ஆன புண்ணியா! போற்றி! போற்றி;

முந்திய பொருள்கள் எல்லாம் பிந்தமுந் துள்ளாய்! போற்றி;
பிந்துறு பொருள்கள் எல்லாம் முந்தப்பிந் துறுவாய்! போற்றி;
மந்திரப் பொருள்கள் எல்லாம் வழுத்தும் மந்திரத்தாய்! போற்றி;
வெந்திறப் படைகள் எல்லாம் வியத்தகும் படையாய்! போற்றி;

பன்னிரு விழிகள் போற்றி; பன்னிரு கரங்கள் போற்றி;
பன்னிரு புயங்கள் போற்றி; பாதபங்கயங்கள் போற்றி;
பன்னிய வடிவேல் போற்றி; பதாகையாஞ் சேவல் போற்றி;
பன்னியர் இருவர் போற்றி; பணிமயில் போற்றி, போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமலைப் பரனே! போற்றி; கருணையங் கடலே! போற்றி;
ஒருதனிக் கடவுள் போற்றி; உமைஅருள் புதல்வா! போற்றி;
அரிதிரு மருகா! போற்றி; ஆரணப் பொருளே! போற்றி;
திருஅடிக் கமலம் போற்றி; திருக்கைவேல் போற்றி, போற்றி.

கந்தநா யகனே போற்றி; கடவுள்மா மணியே! போற்றி;
சிந்தைநோய் தீர்த்தாய் போற்றி; தேவரைக் காத்தாய் போற்றி;
வந்தருள் வரதா! போற்றி; மயில்அயில் உடையாய் போற்றி;
செந்தமிழ்க் குருவே! போற்றி; சிற்பரா! போற்றி, போற்றி.

சிவமே போற்றி; சிற்சபையோன் செல்வா! போற்றி; சௌமாரி
தவமே! போற்றி; விண்உலகத் தலைவா! போற்றி; என்போல்வார்
பவமே ஒழிக்க வந்தருளும் பதியே! போற்றி; அந்நாளில்
அவமே பொடித்த பழநிமலை அண்ணா! போற்றி, போற்றியே.

கந்த!நம; ஐந்துமுகர் தந்தமுருகேச!நம; நங்கைஉமைதன்
மைந்த!நம; பன்னிரு புயத்த!நம; நீபமலர் மாலையணியுந்
தந்தை!நம; ஆறுமுக ஆதி!நம; சோதி!நம; தற்பரமதாம்
எந்தை!நம; என்றும் இளையோய்!நம; குமார!நம; என்றுதொழுதார்.

நண்ணினவர்க்கு இனியாய்! ஓலம்; ஞானநாயகனே! ஓலம்;
பண்ணவர்க்கு இறையே! ஓலம்; பரஞ்சுடர் முதலே! ஓலம்
எண்ணுதற்கு அரியாய்; ஓலம்; யாவையும் படைத்தாய்! ஓலம்;
கண்ணுதல் பெருமான் நல்கும் கடவுளே! ஓலம்; ஓலம்;

தேவர்கள் தேவே! ஓலம்; சிறந்த சிற்பரனே! ஓலம்;
மேவலர்க்கு இடியே! ஓலம்; வேற்படை விமலா! ஓலம்
பாவலர்க்கு எளியாய் ஓலம்; பன்னிரு புயத்தாய்! ஓலம்,
மூவரும் ஆகிநின்ற மூர்த்தியே! ஓலம்; ஓலம். (12)



கந்தா! சரணம்; மயில்வேற்செங்கரனே! சரணம்; காமாரி
மைந்தா! சரணம்; செந்திருமான் மருகா! சரணம்; வறியேன்தன்
சிந்தாகுலந்தீர்த்து அருள்செய்யும்சேயே! சரணம் எனைக்காக்கும்
எந்தாய்! சரணம்; பழநிமலை இறைவா! சரணம் சரணமே.

கூர்வேல்வாழி; தேவர்தொழும் குமரன்வாழி; நடனமயில்
சீமான் வாழி; வலனுயர்த்த சேவல்வாழி; வள்ளிதெய்வப்
பெருமான் வாழி; பேசரிய பெரியோர்வாழி; செஞ்சாலி
ஆர்வண் பண்ணைப் பழநிமலை அப்பன்வாழி; வாழியவே.

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கு அரிய செவ்வேள்
செய்யபேர் அடிகள் வாழ்க; சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க; அன்னான்
பொய்இல்சீர் அடியார் வாழ்க; வாழ்கஇப் புவனமெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க; வாழ்கசீர் அடியர் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# புராணம்

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆக,
கருணைகூர் முகங்கள் ஆறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.

முழுமதி அன்ன ஆறு முகங்களு மூந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரம் ஈராறும், அணி மணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியுங் கண்டான், அவன் தவப்பேற்றின் பாற்றோ.

முண்டக மலர்ந்த தன்ன மூஇரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும்
எண்டரு கரம் ஈராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்கும் சரணமுந் தெரியக்கண்டான்.

மூவர்கள் முதல்வன் வந்தான், முக்கணன் குமரன் வந்தான்.
மேவலர் மடங்கல் வந்தான், வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான், என்றன சின்னம் எல்லாம்.

விரிஞ்சன் மால் தேவராலும் வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்த அவுணர் கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.



புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நல்நெறி ஒழுகச் செய்து நவைஅறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிருதடந் தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

மாயையின் வலியோன் ஆகி மால் முதலோரை வென்றே
ஆயிரத்தோரெட்டண்டம் அரசு செய்து கநூற்றெட்டுக்
காயமது அழிவின்றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன் தாள் சென்னி வைப்பாம்.

அந்திப்போதழ தறவே வாடித் தருளும் வழித் துணை வாருளுங் கோவை
வந்திப்போர் வினைத்தபடி மயிலேறி அயிலெடுத்து வருஞ் செவ்வேளை
சந்திப்போம் மலர் சொரிவோம் புகழ்ந்திடுவோம் அவன் கமலத்தாளுந் தோ
சிந்திப்போமாதலினால் நமது பழவினைகள் எல்லாம் சிந்திப்போமே.[ளும்

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந்தருளினானே

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன்; அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றே?.

சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெருவடிவந்தன்னில்
ஏர்க்குறும் ஒளியுஞ் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்
ஆர்க்குள? உலகில் அம்மா! அற்புதத் தோடும் பல்கால்
பார்க்கினும் தெவிட்டிற்றில்லை இன்னும் என் பார்வைதானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிர கோடிகாமர் அழகெலாம் திரண்(டு) ஒன்றாகி
மேயினஎனினுஞ்செவ்வேள் விமலமாம்சரணந்தன்னில்
தூயநல்எழிலுக்குஆற்றாதுஎன்றிடின்இளையதொல்லோன்
மாயிருவடிவிற்குஎல்லாம் உவமையார்வகுக்கவல்லார்?

சூழுதல்வேண்டும்தாழ்கள்; தொழுதிடல்வேண்டும்அங்கை
தாழுதல்வேண்டும்சென்னி; துதித்திடல்வேண்டும்நாவு
ஆழுதல்வேண்டும்தீமை, அகன்றுநான் இவற்றாளாகி
வாழுதல்வேண்டும்நெஞ்சம்; தடுத்ததுமானம்ஒன்றே

ஊரிலான், குணம்குறியிலான், செயலிலான் உரைக்கும்
பேரிலான், ஒருமுன்னிலான், பின்னிலான், பிறிதோர்
சாரிலான், வரல்போக்கிலான் மேலிலான், தனக்கு
நேரிலான், உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்காண்,
ஆசிலா அவன் அறுமுகத் துண்மையால் அறிநீ,
பேசில் ஆங்கவன் பரனெடு பேதகன் அல்லன்,
தேசுலா அவன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

எங்கணும்பணி வதனங்கள், எங்கணும் விழிகள்,
எங்கணுந்திருக் கேள்விகள், எங்கணும் கரங்கள்,
எங்கணுந்திருக் கழல்அடி எங்கணும் வடிவம்,
எங்கணுஞ்செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பிள்ளைத்தமிழ்

## திருச்செந்தூர்

(பகழிக்கூத்தர்)

கத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலைஉண்டு,
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலைஉண்டு,
தழைத்துக் கழுத்து வளைந்த மணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத்தினுக்கு விலைஉண்டு;
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரம்உண்டு; உன்கனிவாய்
முத்தந் தனக்கு விலை இல்லை;
முருகா! முத்தந் தருகவே;
முத்தஞ் சொரியுங் கடல்அலைவாய்
முதல்வா! முத்தந் தருகவே. (1)

எள்அத் தனைவந்(து) உறுபசிக்கும்
இரங்கிப், பரந்து, சிறுபண்டி
எக்கிக் குழைந்து, மணித்துவர்வாய்
இதழைக் குவித்து, விரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து,
தொட்டில் உதைந்து, பெருவிரலைச்
சுவைத்துக், கடைவாய் நீர்ஒழுகத்,
தோளின் மகரக் குழைதவழ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெள்ளத் தவழ்ந்து, குறுமூரல்
விளைத்து, மடியின் மீதிருந்து,
விம்மிப், பொருமி, முகம்பார்த்து,
வேண்டும் உமையாள் களபமுலை
மள்ளத் தழுதுண்டு, அகமகிழ்ந்த
மழலைச் சிறுவா! வருகவே,
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா! வருகவே. (2)

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப், பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா!
சேரா நிருதர் குலகலகா!
சேவற் கொடியாய்! திருச்செந்தூர்த்
தேவா! தேவர் சிறைமீட்ட
செல்வா! என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து, முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து, விருப்புடன் அப்
பா! வா, வா, என்று உனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால்
வாராது இருக்க வழக்குண்டோ?
வடிவேல் முருகா! வருகவே,
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளிகணவா! வருகவே. (3)

## வைத்தீஸ்வரன் கோயில்

(குமரகுருபரசுவாமிகள்)

பைந்தண் கமல வட்டவணைப்
பாவை அனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படலமூட முடைநறவின்



கந்தம் பொதிந்த செந்துவர் வாய்க்
கடைசி மகளிர் செங்கெலைப்பைங்
கன்னல் எனவுங் கன்னலைப்பூங்
கமுகம் எனவும் கடைக்கூடாத்
தந்தம் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறுஞ்
சமயத் தவர்போல் தலைமயங்கும்
அந்தண் பழனக் கந்தபுரிக்கு
அரசே! வருக, வருகவே,
அருளா னந்தக் கடற்பிறந்த
அமுதே! வருக, வருகவே. (4)

## திருவிரிஞ்சை

(மார்க்கசகாயதேவர்)

உருகா மனமுஞ், சிவஞானம்
உணரா அறிவும், உனதுபுகழ்
ஓதா நாவும், ஓதக்கேட்டு
உவந்தே இனிய் நதிபோலப்
பெருகா விழியும், உடையேனைப்
பிறவிக் கடலில் வீழாமல்
பேணி எடுத்திங்கு என்துள்ளம்
பிரியா விரிஞ்சைப் பதிவாழும்
முருகா! வருக, சதுர்வேத
முதல்வா! வருக, வினைதீர்க்கும்
முனைவா! வருக, மலராறு
முகவா! வருக, திருமாலின்
மருகா! வருக, மயிலேறு
மன்னு! வருக! அடியார்கள்
வாழ்வே! வருக. தெய்வசிகா
மணியே! வருக; வருகவே. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் உனது திருஅடியைக்
கண்டு, ஆதரவு பெருகிஇரு
கையால் தொழுதுஉன் திருக்கோயில்
காலால் வலஞ்செய்து உனதுபுகழ்
பண்ணால் உருகிப் புகழ்ந்து, கண்ணீர்
பாயா எனையுந் தாயாகப்,
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணல்! வருக; உலகமுழுது
ஆண்டாய்! வருக; கதிதரும்எம்
ஐயா! வருக, ஆறுமுக
அப்பா! வருக, விளங்குகதிர்
வண்ணா! வருக, மயிலேறும்
அண்ணா! வருக, அடியார்கள்
வாழ்வே! வருக, தெய்வசிகா
மணியே! வருக, வருகவே. (6)

தேவே! வருக, திருவிரிஞ்சைச் சேயே!
வருக, தெவிட்டாத
தேனே! வருக, சுவை அமுதத்
தெளிவே! வருக, கதிகொடுக்குங்
காவே! வருக, பெருங்கருணைக்
கடலே! வருக, கலைபொழியுங்
காரே! வருக, மரகதத்தின்
கண்ணே! வருக, விண்ணோர்கள்
கோவே! வருக, பெரியகுணக்
குன்றே! வருக, உபதேச
குருவே! வருக, சிவஞானக்
கொழுந்தே! வருக, ஒருகரத்தின்
மாவேல் எடுத்த பரப்பிரம
வடிவே! வருக, அடியார்கள்
வாழ்வே! வருக, தெய்வசிகா
மணியே! வருக, வருகவே. (7)



வங்கத் தரங்கக் கடலன்று,
மாயக் கிரவுஞ்ச கிரிஅன்று,
வானத்துயரும் மாஅன்று,
மருவார் உறையும் பதிஅன்று,
துங்கத் தசுரர் முடிஅன்று,
தொலையா அமரர் சிறைஅன்று,
துரக்க கொடுமா முகிஅன்று,
தொழுவார் பிறவித் துயரன்று,
சங்கத் தவனும் மலரோனுந்
தவளா சலத்தில் வருவோனும்
சரணஞ் சரணம் எனும்புதிய
தண்டை முழங்குஞ் சிறுதாளால்
அங்கைக் கதிர்வேல் உடையோனே!
அடியேஞ் சிற்றில் அழியேலே,
அரசே! விரிஞ்சைப் பதிவாழ்வே!
அடியேஞ் சிற்றில் அழியேலே. (8)

## திருத்தணிகை

(கந்தப்பதேசிகர்)

கன்னற் குதலைச் செங்கனிவாய்க்
கலச முலைப்பொற் கடைசியர்தங்
கருங்கண் மலரைப் பூந்தடத்திற்
கமலத் தருகு முறுக்கவிழும்,
நன்னர்க் குவளை எனஅறுகால்
நாடிப் பெடையி னெடுஞ்சுழலும்,
நகைத்தண் தரளம் பொழிநிலவால்
நறும்பூங் குமுதம் வாய்விரியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னற் குழலை மேகம்எனப்
பெருகுங் களிமா மயில்அகவும்,
பிறழும் வளைக்கை கஞ்சம்எனப்
பிரியா(து) அனங்கள் உவந்துஏறும்,
வன்னப் பணைசூழ் செருத்தணிகை
வாழ்வே! வருக, வருகவே!
மலையான் உதவும் உமையாள்கண்
மணியே! வருக, வருகவே. (9)

## திருப்போரூர்

(சிதம்பரசுவாமிகள்)

பூவே! பூவிற் பரிமள மே!அப்
பூநிறை சுவைநறவே!
பொங்குங் கடலே! கடலில் உதித்தெழு
புனிதத் தெள்அமுதே!
காவே! காவிற் கொஞ்சும் பஞ்ச
வனக்கடவுட் கிளியே!
கண்ணே! கண்உறு பாவாய்! பூவாய்!
கனியே! கனிரசமே!
தேவே! தேவர் சிரோமணி யே!என்
சீர்உயிரே! உயிரிற்
செம்பொரு ளே!அரு ளே!முழு மணியே!
மணியிற் தேசிகமே!
மூவா மறையே! மறையின் பொருளே!
முத்தந் தந்தருளே!
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக!
முத்தந் தந்தருளே! (10)

கருத்தே புகுந்து கதிகாட்டும்
கண்ணே! வருக; மெஞ்ஞானக்
கரும்பே! வருக, கருணைபொழி
காரே! வருக; ஆனந்தப்



பெருக்கே! வருக, யாங்கள் பெறும்
பேறே! வருக; மறைசொல்கிளிப்
பிள்ளாய்! வருக, பிறங்குதெய்வப்
பெம்மான்! வருக; குறமடந்தை
தருக்கே! வருக; மிடிஅகற்றுந்
தருவே! வருக; மன்பதைக்கோர்
தஞ்சே! வருக; எமைஅளிக்குந்
தாயே! வருக, பவப்பிணிக்கு
மருந்தே! வருக சமரபுரி
வாழ்வே! வருக, வருகவே!
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல், வருக, வருகவே. (11)

தேமாங் கனியின் அடுப்பு அமைத்துத்
திகழ்ஊன் கழிந்த வலம்புரியில்
செந்தேன் உலைப்பெய்(து) அர(வு)ஈன்ற
செழுமா மணிவெங் கனல்மூட்டிப்
பூமா தளையின் விதைஅரிசி
புகட்டிச் சமைத்துக் கதலிமடல்
பொங்கப் பிழியும் அதன்கனியும்
பொருந்த அளவிக் கறிஅட்டுக்
காமா தவிப்பூம் பந்தரிடைக்
கயற்கண் ஆயம் இழைத்த வண்டல்
கருதும் புவன கோடிஎல்லாம்
கரந்தும் படைத்தும் காக்கும்ஒரு
சீமான்! உனக்கோர் இலக்கோசொல்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே,
தேரூர் வீதிப் போரூரா!
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை

(பண்டாரத்தையா)

வெண்சாமரைபோற் பலவிதமாய்
விரிந்த மனத்தின் கருவிஎல்லாம்
வெவ்வேறாகப் பகுத்தறிந்த
விஷயம் அறிந்தங் கு(உ)ணை அறிந்து
கண்சாறு ஒழுக விம்மிவிம்மிக்
கரைய அழுது கசிந்துஉருகிக்
களித்துச் சிரித்துக் குதித்தாடிக்
கவினுக் குழறத் துதித்திடுவோர்
எண்சாண் உடம்பும் இனிக்க மகிழ்ந்து
எங்கும் பெருகி அலைமோதி
இரண்டு வினையின் கரைகள் கடந்து
எழுந்த பரமானந்தம்எனும்
வண்சாகரத்தில் உதித்த சுதை
மருந்தே! வருக, வருகவே,
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி! வருகவே! (13)

உ

## திருவருட்பா

(இராமலிங்கசுவாமி)

முடியா முதலே! சரணம், சரணம்.
முருகா! குமரா! சரணம், சரணம்,
வடிவேலவரே! சரணம், சரணம்,
மயில்ஊர் மணியே! சரணம், சரணம்,
அடியார்க்கு எளியாய்! சரணம், சரணம்,
அரியாய்! பெரியாய்! சரணம், சரணம்,
கடியாக் கதியே! சரணம், சரணம்,
கந்தா! சரணம், சரணம், சரணம். (1)

நடவுந் தனிமா மயிலோய்! சரணம்,
நல்லார் புகழும் வல்லோய்! சரணம்,
திடமுந் திருவுந் தருவோய்! சரணம்,
தேவர்க்(கு) அரியாய்! சரணம், சரணம்,
தடவண் புயனே! சரணம், சரணம்,
தனிமா முதலே! சரணம், சரணம்,
கடவுள் மணியே! சரணம், சரணம்,
கந்தா! சரணம், சரணம், சரணம். (2)

நங்கட்(கு) இனியாய்! சரணம், சரணம்,
நந்தா உயர்சம் பந்தா! சரணம்,
திங்கட் சடையான் மகனே! சரணம்,
சிவை தந்(து) அருளும் புதல்வா! சரணம்,
துங்கச் சுகநன்று அருள்வோய்! சரணம்.
சுரர்வாழ்த் திடுநம் துரையே! சரணம்,
கங்கைக்(கு) ஒருமா மதலாய்! சரணம்,
கந்தா! சரணம், சரணம், சரணம். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமையுடன் நினதுதிரு மலர்அடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்புஒன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்,
பெருமைபெறுநின துபுகழ்பேசவேண்டும்,பொய்மை
பேசா திருக்கவேண்டும்,
பெருநெறிபிடித்தொழுகவேண்டும்மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்,
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும், உனை
மறவா திருக்க வேண்டும்,
மதிவேண்டும்,நின்கருணைநிதிவேண்டும்,நோயற்ற
வாழ்வுநான் வாழவேண்டும்,
தருமம்மிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே! (4)

எத்திக்கும் என்உளம் தித்திக்கும் இன்பமே!
என்உயிர்க்(கு) உயிராகும்ஓர்
ஏகமே! ஆனந்த போகமே! யோகமே!
என்பெருஞ் செல்வமே!நல்
முத்திக்கு முதலான முதல்வனே! மெய்ஞ்ஞான
மூர்த்தியே! முடிவிலாத
முருகனே! நெடியமான் மருகனே! சிவபிரான்
முத்தாடும் அருமைமகனே!
பத்திக்கு வந்தருள் புரிந்தருளு நின் அடிப்
பற்றருளி என்னை இந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாய்ப்
பண்ணாமல் ஆண்டுஅருளுவாய்,
சத்திக்கு நேர்ச்சென்னைக் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே! (5)

௨

## தனிப்பாடல்கள்

(சுப்பிரமணியர் விருத்தம்

மாமேவு நவரத்ன கேயூர மணிமகுடம்
மன்னிப் பொலிந்தமுடியும்
வச்சிர நுதல்திலக வெண்நீறும் ஓராறு
வதனவிம் பத்தின் அழகும்,
பாமேவு பத்தர்க்கு மடைதிறந்து அன்பொழுகு
பன்னிரு விழிக்கருணையும்,
பகர்அரிய பழமறை பழுத்துஒழுகு சிறுநகைப்
பவளஞ் சிறந்தவாயும்,
காமேவு கரகமல பந்தியுஞ் சேவலும்,
கனகமயிலுங்,கிண்கிணிக்
காலும்மூந் நாலும்வடி வேலும்என் மேலும்எக்
காலுந் துலங்கவருவாய்,
தாமோத ரானந்த! கோவிந்த! வைகுந்த!
சரசகோ பாலன்மருகா!
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவாநந்தனே! (1)

கண்ணேறு வாராது, பிணிஒன்று சேராது,
கவலைப் படாதுநெஞ்சந்
கலியாது, சலியாது, நலியாது, மெலியாது,
கலிஎன்ற பேய்அடாது,
விண்ணேறும் அணுகாது, கன்மவினை தொடராது,
விஷமச் சுரம்வராது,
வெய்யபூ தம்பில்லி வஞ்சனைகள் தொடரா,
விஷம்பரவு செந்தும்அடரா,
எண்ணேறு சனனங்கள் கிடையாது, காலபயம்
எள்ளளவு மேதிராதுஇவ்,
ஏழைக்(கு)இரங்கிஅருள்தெய்வம்உனை அல்லாமல்
இன்னும்ஒரு தெய்வம்உளதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணேறு கங்கைமலை மங்கைஅருள் தங்கமே!
சரசகோ பாலன்மருகா!
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவானந்தனே!. (2)

## காசிகதிர்காமவேலர்

உலகடங் கலும்அருண வெயில்உமிழும் உபயரவி
ஒருகோடி நிகர்மேதியும்,
உமைமுலைப்பால்ஒழுகுகடைவாயும்இளநகையும்,
உச்சியுந்திகழ் கொண்டையும்,
திலதமும், சுட்டியும், திருநீறும், அழகும்ஒரு
திருநுதலும், அருள்மாரிசேர்
திருநயனமும், கருணை வதனமும், அம்மைதரு
திருமுலைப் பாற்கிண்ணமும்,
இலகுசெங் கைம்மலரும், அஞ்சல்என ஒரும் ஒருகரமும்,
இருசெவியும், உபயாவியாம்
இருதிண் தலங்களும், பாததா மரைகளும்,
இலங்குமிகு குழந்தைவடிவாய்க்
கலகலெனவேசிலம்பு அடியனேன் கங்கைநீ
காசிதனில் ஓடிவருவாய்,
கங்கைஉமை பாலனே! கதிர்காம வேலனே!
கந்தசுவா மிக்கடவுளே.! (3

தற்பரஞ் சோதியே! பூரணப் பிரமமே!
சதுர்முகப் பிரமாதியோர்
சதுர்மறையும் அடிமுடிகள் காணும லேதேடு
சச்சிதா னந்தசிவமே!
அற்புதா னந்தஅரு ளமுதமழை மேகமே!
அனந்தகல் யாணகுணமாம்
அகண்டபர வெளியே!என் உயிரினுக்கு உயிரே!
அருட்கருணை மேருகிரியே!



சிற்பரந் தந்தசிந் தாமணிக் குவியலே!
செந்தேன் செழுஞ்சலதியே!
தெள்அமுத மே!சன்ம மாற்றுதற்(கு) அடியார்கள்
தேடவரும் அருமருந்தே!
கற்பகச் சோலையே! என்றுஅடிய னேன்நினைக்
கவிமாரி சொரிய!அருள்வாய்;
கங்கைஉமை பாலனே! கதிர்காம வேலனே!
கந்தசுவா மிக்கடவுளே! (4)

ஆருக்கு வந்திடு விருந்தோ? இதென்றுநீ
அறியாது போலிருந்தால்,
அடியேனை அஞ்சல்என் பார்கள்ஆ ரிங்குஉனக்(கு)
அடிமைமேல் அன்பில்லையோ?
ஊருக்கு வந்தவள் ஒருத்திபிள் ளைக்குமுலை
ஊட்டிடுவளோ? சொல்லுவாய்,
உனக்கடிமை ஆகியும், உன்புகழ்கள் பாடியும்
உயிர்வருந்திடுதல் நீதியோ?
பாருக்கு ளேகலி யுகத்திலே கண்கண்ட
பரமதெய் வம் என்றுனைப்
பாருளோர் மெச்சும்அது மெய்யாகும் இப்போது
பாவியேற்கு அருள்புரிந்தால்;
காருக்கு மதியவா மழைபொழியு மீருது
காமலர் சர்வஞ்ஞனே!
கங்கைஉமை பாலனே! கதிர்காம வேலனே!
கந்தசுவாமிக் கடவுளே! (5)

## பழநி

(இராமசாமிச்செட்டியார்)

கந்தனே! முருகனே! கடல்வண்ணன் மருகனே!
கருதிளமு தரும்அழகனே!
கடப்பமலர் மாலைஅணி வாகனே! யோகனே!
காங்கேய னே!தூயனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததமும் அன்பர்வினை தீர்க்கவரு நாதனே!
தவமுனிவர் புகழ்பாதனே!
தண்டாயு தங்கொண்ட கையனே! மெய்யனே!
சதுர்பெருகும் எமதையனே!
சுந்தர கஜானன் துணைவனே! குக்கிடத்
துவசனே! விபுதர்எவரும்
துதிசெயுங் கத்தனே! அத்தனே! முத்தனே!
சுத்தனே! பிரசித்தனே!
பந்தெனுந் தனவள்ளி நாயகி மணாளனே!
படிறனேன் தனை ஆளுவாய்,
பணிவுபூண் டவர்ஏத்து மகிமை நீண்டெழில்சேர்த்த
பழநிஆண் டவமூர்த்தியே! (6

## குன்றக்குடி

(இராமசாமிச்செட்டியார்)

சுத்தசை தன்யமே! நித்திய விநோதமே!
சொற்கடங் காதபொருளே!
தூண்டாத தீபமே! உரையாத தங்கமே!
சுபலட்ச ணங்கொள்மணியே!
தத்துவம் விளங்கும் சிவானந்த வாரியே!
தழைதரும் புண்யஉருவே
சஞ்சிதா காமியப் பிராரப்த வினையைத்
தவிர்த்தருள்செய் அருமருந்தே!
எத்திக்கினும் பரவு புகழினிற் புகழாவை
என்கண்மணி யே!என் அறிவே!
என்றும்உன் சரணமே கதிஎன்று அடைந்தஇவ்
ஏழைக்கு இரங்கி அருள்வாய்,
அத்திமதி யைக்கவள மாக்கைநீட் டுங்குன்றை
அம்பதி இலங்கும்அரசே!
அமையுமணி சிரஉரக மிசைதுயில்செய் அரிமருக
அமலபர சிவமுருகனே! (7)



## திருப்போரூர்

(இராமசாமிச்செட்டியார்)

மண்ணின்மேல் ஆசை, மாதர்மேல் ஆசை,
வயங்குபொன் தன்னின்மேல் ஆசை,
நண்ணியே மயங்குஇம் மூடனுக்கு இரங்கி
நாடிவந்து என்மயல் தவிர்ப்பாய்,
கண்அகல் ஞாலம் உண்டமால் மருகா!
கருதருஞ் சக்திவேல் முருகா!
தண்அமை பொழில்கள் சூழ்தரும் போரிச்
சண்முகா! விண்முக மணியே! (8)

அன்புடன் நின்தாள் துதிக்குமெய் அன்பர்க்(கு)
அருளுடன் கல்விநற் செல்வம்
இன்புறு புகழ்தீர்க் காயுளும் நலமாம்
யாவையும் தந்துகாத்(து) அளித்து
வன்பவம் அகற்றி உயர்கதி அளிப்பாய்
வச்ரபா ணியின்மரு கா!உன்
தன்புகழ் போல்ஆர் பெறுவர்கள் போரிச்
சண்முகா! விண்முக மணியே! (9)

எவ்வுயிர் மீதும் இரக்கமும், நல்லோர்
இணக்கமும், பொறுமையும், நினது
திவ்விய மலர்த்தாள் பக்தியும் ஈகை
சீர்த்தியும் தந்தருள் புரிவாய்
செவ்விய வடிவேல் கொண்டுசூர் தடிந்து
தேவர்கோ னுக்கு அரசளித்தோய்!
தவ்விலாத் தவத்தோர் சூழ்ந்திடும் போரிச்
சண்முகா! விண்முக மணியே! (70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலனே! சரணம்; பசுமயில் ஏறும்
வித்தகா! சரணம், மாது உமையின்
பாலனே! சரணம், குக்கிடத் துவச
பகவனே! சரணம் வெவ்அசுரர்
காலனே! சரணம் புவியினில் நாய்க்குங்
கடையனு கியஎனை ஆள்வி
சாலனே! சரணம், மேன்மைசேர் போரிச்
சண்முகா! விண்முக மணியே! (11)

(சிதம்பரசுவாமிகள்)

எண்ணி லாத நெடுங்காலம்
எண்ணி லாத பலபிறவி
எடுத்தே இளைத்துஇங்கு அவைநீக்கி,
இம்மா னிடத்தில் வந்துதித்து,
மண்ணின் வாழ்க்கை மெய்யாக
மயங்கி உழன்றால் அடியேன்உன்
மாறுப் பெருமை தரும்பாத
வனசத் துணைஎன்(று) அடைவேனே?
கண்ணின் மணியே! உயிர்க்கனியே!
கருணைப் புயலே! சுகக்கடலே!
கச்சித்தாய் உச்சியை மோந்து
கண்ணே(டு) அணைக்குந் திருத்தாளா!
புண்ணியோர் எண்ணிய கரும்பே!
பொழிமும் மதவா ரணமுகத்தோன்
பொற்பார் துணையே! அற்புதனே!
போரூர் முருகப் பெருமானே! (12)



எண்ணியஎண் ணியவாறே சிறியனுக்கு ஈந்தருளும்
புண்ணியனே! நின்மகிமையை ஓர்ந்திலன் பொய்யவனேன்
கண்உறு மாமணியே! கருத்தூறுங் கனிரசமே!
தண்ணளி மாமுகிலே! போரிமேவிய சண்முகனே!

நாயேன்உன் சீரடிக்கு நன்குஅல்ல செய்தாலும்,
பேயேன் இழைத்த பெரும்பிழையை,—நீயே
பொறுத்து ஆள்வது உன்கடனும், போரூரா! என்னை
ஒறுத்தால் எனக்குயார் உறவு? (14)

இல்லறத்தான் அல்லேன், இயற்கைத் துறவிஅல்லேன்,
நல்அறத்து ஞானிஅல்லேன், நாயினேன்—சொல்அறத்தின்
ஒன்றேனும் இல்லேன், உயர்ந்ததிருப் போரூரா!
என்றேநான் ஈடேறு வேன்? (15)

முருகா! எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார், வியாதி அடைந்தனையார்
ஒருகால மும்துன்பம் எய்தார், பரகதி உற்றிடுவார்,
பொருகாலன் நாடுபுகார், சமராபுரிப் புண்ணியனே

அறுவகைத் தாயர் குடமுலை சுரப்ப
அம்பிகை திருஉளங் களிப்ப
மறுஅறு கங்கைத் தாய்தனி வாழ்த்தி
வடிவெலாங் குளிர்ந்துபூ ரிப்ப
நறைகமழ் வனச மாமிகண் களிப்ப
நடந்தவர் எதிர்வருங் குருந்தே!
விறலுறு நினைவந்(து) அடைந்தனன் போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே! (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செந்தூர்

(சுவாமிநாததேசிகர்)

வரங்கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட் செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறைஇறைஞ்சுஞ் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமஎன் தன் கண்ணைவிட்டு நீங்காவே.

பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத உள்ளமும் நான் படைத் தாற்நாகேழுஞ்சென்று
கூடா துயர்கதி கூடுவனே?குன்(று) எறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாய்என்கொ லோநின் திருஅருளே.

பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையும் பன்னிரண்டு
மணிக்குழை களும்ஓர் ஆறு வதனமும் வாகைவேலும்
தணிப்பசுங் கடப்பந் தாருந் தண்டையந் தாளு நாளும்
கணிப்பருஞ் செந்தி லாய்என் கருத்தைவிட்டு அகன்றிடாவே.

## மாவிட்டபுரம்

(குமாரசுவாமிப்புலவர்

சீர்மேவு நவரத்ன சிங்கார கோலம்மிகு
செம்பொனின் மகுடமுடியும்,
திவ்விய குணங்கள்ஓர் ஆறுமாய் வீறுற்ற
செய்யமுகம் மூவிரண்டும்,
ஏர்மேவு நீபமலர் மாலையொடு செச்சைமலர்
இனமாலை புரளும்மார்பும்,
எழில்மேவு மகமேரு கிரிபோல நிலவுற்ற
இணையிலாப் புயமிராறும்,



கார்மேவு கடலில்எழு மலரிபோன் மயிலில்வரு
கனகமய மேனியோடு,
கவின்மேவும் ஆண்டலைக் கொடியம் வேற்படையுமாய்க்
காட்சிதந்(து) அருள்புரிகுவாய்,
பார்மேவு பல்உயிர்க்கு உயிராகி நிறைகின்ற
பாரமே சுரவடிவமே,
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! (21)

## வதுளை

(குமாரசுவாமிப்புலவர்)

ஐந்துமுகர் பாலனே! செந்திநகர் வேலனே!
அறுமுகப் பெரும! தேவர்
அதிபனே! சரவணத்து ஒருவனே! குமரனே!
ஆதிசிவ சத்தி ஆகும்
குந்தளந லந்தரிக்கு இனியதொரு மைந்தனே!
கும்ப சம்பவ தேசிகா!
குக்குடத் துவசனே! அழகனே! குழகனே!
கோடி சூர்யப்ர காசனே
கந்தனே! முருகனே! வந்தனைசெய் வார்மனக்
கமலமலர் மருவு தேவே!
கத்தனே! முத்தனே! தாரகவி மாரகக்
கடவுளே! என்று நின்னைப்
பந்தம்அற நாயனேன் சந்ததமும் வாழ்த்தியே
பணியஅருள் செய்தி கண்டாய்
பச்சைமயில் ஏறும்முரு கேசனே! வதுளையம்
பதியில்உறை கதிரே சனே! (22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் பஞ்சகம்

குகனே! வருக, களங்கம்இலாக்
கோனே! வருக, கறைமிடற்றோன்
மகனே! வருக, மணப்பூத்த
மலரே! வருக, ஓர்ஆறு
முகனே வருக, சிவானந்த
முதலே! வருக, அடியாரின்
அகனே! வருக, பழநிமலை
அரசே! வருக, வருகவே. (23

நாதா! தருக, நலம்எல்லாம்,
நண்பே தருக உனைவேண்ட,
போகா! தருக, மெஞ்ஞானம்;
புனிதா! தருக, கருணை,பொறை;
தாதா! தருக, கல்விகுணம்;
தயையே! தருக, கேட்டஎலாம்,
ஈதா எனுமுன் பழநிமலை
இறைவா! தருக, தருகவே! (24)

## முருகன்

(சண்முக ஞானியார்)

மன் உயிர் யாவையுந் தன் உயிர் போற்செய்யும் மாதவம்போற்
பின் ஒரு மாதவம் இல்லைகண் டாய்இனிப் பேதைநெஞ்சே!
மின் இடை யார்முக நோக்குவை யோ?சதிர் வேல்முருகன்
தன் இரு தாள்முகம் நோக்குவை யோ?என்ன சங்கடமே.



சிந்தனை செய்ய வருமுரு கா!நின் திருஅடியை
வந்தனை செய்து வணங்கிநின் றல்வந்த வல்வினையும்
அந்தக னல்விடும் ஓலையும் தூதரும் அம்புவிமேல்
பந்தமும் தொந்தமும் பாசமும் நாசப் படு(ம்)இனியே.

## வாழ்த்து

(இராமசாமிச் செட்டியார்)

திருவாவி னன்குடிவை யாபுரி திருப்பழநி
சிவகிரி எனப்பெயர்பெறுஞ்
சீர்பெற்ற நின்திருத் தலம்வாழி, நல்திருத்
தேவிமார் இருவர்வாழி,
ஒருவாத புகழ்கொண்ட தண்டாயு தம்வாழி,
ஒளிர்சக்தி வேலும்வாழி,
உயர்ந்தசெஞ் சேவலங் கொடிவாழி, மயில்வாழி,
ஓங்குசந் நிதியும்வாழி,
திருவாகம் மேவுநின் அருள்வாழி, நீவாழி,
நிகரில்நவ வீரர்வாழி,
நிலைபெற்ற சதுர்வேதம் வாழி,மழை முகில்வாழி,
நின் பூசை யாளர்வாழி,
பரிவாசி யோகஞ்செய் வோர்வாழி, நிற்பரவு
பத்தர்நீ டூழிவாழி,
பணிவுபூண் டவர்எத்து மகிமைநீண் டெழில்சேர்த்த
பழநிஆண் டவமூர்த்தியே! (29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பதப் பொருள்

[எண் பாட்டைக் குறிக்கும்]

## திருமுருகாற்றுப்படை

(எண் வரியைக் குறிக்கும்)

### திருப்பரங்குன்றம்

1 ஏர்பு - எழுந்து
3 ஓஅற-ஒழிவில்லாமல்
சேண் - தூரம்
4 நோன் - வலிமை
5 செறுநர் - பகைவர்
7 கார்கோள் - கடல்
கமம் - நிறைவு
மழை - மேகங்கள்
8 வள் - வலிமை
9 பெயல் - முதற்பெய்த மழை
10 பொதுளிய - தழைத்த
12 மால் - பெருமை
வரை - மூங்கில்
நிவந்த - வளர்ந்த
13 கிண்கிணி - சிறு சதங்கை
14 நுசுப்பு - இடை
16 காழ் - மணிக்கோவை
17 கவின் - அழகு
19 இகந்து - தாண்டி
செயிர் - குற்றம்
20 ஓதி - மயிர்
23 உத்தி - சீதேவி என்னும் தலைக்கோலம்
25 மண்ணுறுத்து - அலங்கரித்து
28 இணர் - பூங்கொத்து
31 பிண்டி - அசோகு
33 குறடு - சந்தனம்
தெய்வை - குழம்பு
37 வெள்ளில்-விளாமரம்
42 அடுக்கம் - பக்கமலை
47 உலறிய - காய்ந்த
கதுப்பு - மயிர்
50 பிணர் - சமம் இல்லாத வடிவம்
56 துணங்கை - ஒரு வகைக் கூத்து
61 சேய் - சுப்பிரமணியக் கடவுள்
62 செம்மல் - பெருமை
71 மறுகு - நெடுந்தெரு
கூடல் - மதுரை
குடவயின் - மேற்குப் பக்கத்தில்

### திருச்சீரலைவாய்

78 வை - கூர்மை
அரி - புகர்
79 துயல்வர - அசைய
81 கூற்றம் - யமன்
வேழம் - யானை
87 கவைஇ - சூழ்ந்து



91 மறு - குற்றம்
93 ஆர்வலர்-அன்புடையர்
95 உளி - ஆராய்ந்து
96 ஓர்க்கும்-நினைக்கும்
97 ஏமுற - மகிழ
100 கறுவு - கோபம்
104 பகடு - பெருமை
105 மொய்ம்பு - வலிமை
108 உக்கம் - மருங்கு
109 குறங்கு - தொடை
110 கடாவ - செலுத்த
கலிங்கம் - ஆடை
111 ஐ - வியப்பு
எஃகு - வேல்
119 பல்லியம் - துந்துமி
120 வயிர் - கொம்பு
வால் - வெளுத்த

### திரு ஆவினன்குடி

126 சீரை - மரவுரி
தைஇய - போர்த்த
131 இகல் - மாறுபாடு
132 செற்றம் - பகை
136 மேவர - பொருந்த
137 துனி - வெறுப்பு
139 ஆகம் - மார்பு
140 திவவு - வார்க்கட்டு
145 திதலை - தேமல்
146 பருமம் - மேகலை
148 கடு - நஞ்சு
149 தாம்பு - துளை
152 வலவயின்-வெற்றிக் களம்
154 மூஎயில் - முப்புரம்
174 ஏமுறும் - மயக்கமுறும்
174 கொட்பு - சுழற்சி

### திருவேரகம்

183 ஞாண் - பூநூல்
184 காழகம் - வஸ்திரம்

### குன்றுதோறாடல்

191 புட்டில் - தக்கோலம்
குளவி - காட்டுமல்லிகை
192 கூதாளம்-கூதாளிச் செடி
193 சாந்து - சந்தனம்
கேழ் - நிறம்
194 கானவர் - குறவர்
195 அமை - மூங்கில்
197 தொண்டகம் - பறை
201 குல்லை-கஞ்சங்குல்லை
204 காழ் - மேகலை
207 செயலை - அசோகு
208 செச்சை - வெட்சி
210 புகர் - குற்றம்
217 அதான்று - அது அன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமுதிர்சோலை

218 விரைஇ - கலந்து
மறி - ஆடு
223 துருத்தி - ஆற்றிடைக்குன்ற
225 சதுக்கம் - நாற்சந்தி
228 ஐயவி - வெண்சிறுகடுகு
ஐது - மெல்லிது
229 குடந்தம்பட்டு - கைகூப்பி வழிபட்டு
236 கணவீரம் - செவ்வலரி
238 நளி - நெருங்கிய
240 இமிழ் - ஒலிக்கின்ற
243 இயம் - வாத்தியம்
உட்க - அஞ்ச
253 சிமையம் - இமயமலை
255 ஆறமர் - ஆறுவடிவம் பொருந்திய
259 குழவி - மகன்
265 தடம் - பெருமை
270 ஆர்த்தல் - கூட்டுவித்தல்
274 இயவுள் - தலைவன்
280 புரைகுனர் - ஒப்பவர்
282 கூளியர் - சேவித்து நிற்போர்
283 சாறு - திருவிழா
வீறு - பொலிவு
288 நிவப்பு - உயர்ச்சி
289 அணங்கு - வருத்தம்
292 விளிவு - கேடு
293 முந்நீர் - கடல்
296 நுடங்கி - அசைந்து
297 ஆரம் - சந்தனம்
300 இறால் - தேன்கூடு
301 ஆசினி - பலா
கலாவ - கலக்க
302 நாகம் - சுரப்புன்னை
307 தாழை - தென்னை
309 கறி - மிளகு
311 வயம் - வலிமை
இரீஇ - கெட
கேழல் - ஆண்பன்றி
313 உளியம் - கரடி
314 விடர் - குகை
315 ஆமா - காட்டுப்பசு

## கந்தரலங்காரம்

1 கால் - காற்று
அசரீரி - அருவப்பொருள்
சரீரி - உருவப்பொருள்
2 குவலயம் - பூமி
அத்தம் - பொருள்
3 வைதார் - இகழ்ந்தவர்
வாரணம் - யானை
இலஞ்சியம் - நீர்நிலையிற் தோன்றியது
4 வை - கூர்மை
5 அவிரோதம் - விரோதமின்மை
அந்தகன் - இயமன்



6 சிகண்டி - மயில்
சீலம் - நல்லொழுக்கம்
7 சேல் - சேல்மீன்
கொற்றம் - வெற்றி
மயூரம் - மயில்
8 நாள் - நட்சத்திரம்
கோள் - கிரகம்
கூற்று - இயமன்
9 மால் - மயக்கம்
வேலை - சமுத்திரம்
அயன் - பிரமா
10 கணபணம் - பாம்பு
11 புவனம் - உலகம்
சாகரம் - சமுத்திரம்
12 பாதாம்புயம் - பாத தாமரை
குவடு - மலை
13 தொழும்பு - தொண்டு
14 கிலேசம் - துயர்
15 ஆல் - கல்லால்
உக்கு - சிவன்
16 கராசலம் - திக்குயானைகள் (கர + அசலம்)
மயூரம் - மயில்
18 காந்தன் - தலைவன், கணவன்
19 வாக்கு - சாயல்
20 அரா - பாம்பு
வேணி - சடை
குரா - குராமலர்
21 முசியாமல் - தளராமல்
மிடிக்கின்றிலை - வறுமை அடைகின்றாயில்லை (மிடி - வறுமை)
22 கோடாத - வளையாத, நெறிதப்பாத
தாடாளன் - முயற்சியுள்ளவன்
23 ஏற்றம் - புகழ்
சாளிகை - பை
24 மை - கருமை
பைவரும் - துன்பப்படும்,
கேளும் - உறவினரும்
பதியும் - வீட்டிலுள்ளவர்களும்
25 மாலோன் - விஷ்ணு
மன்றாடி - சிவன்
மேதினி - பூமி
26 கதி - முத்தி
பொதி - கட்டு
27 கொழுகொம்பு - கொடிகள்படரும் மரக்கொம்பு
குதி - ஆனந்தம்

## கந்தர் அநுபூதி

1 கனகல்லு - கனமுள்ள கல்லு
பஞ்சக்கரம் - ஐந்து கரங்கள்
2 மாருதம் - காற்று
நவில் - சொல்லுகிற
4 செம்மான் மகள் - வள்ளிநாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெம்மான்-பெருமான்
5 கைவாய் - கையில் பொருந்திய
6 புங்கவர்-மேலானவன்.
பரவும் - துதிக்கும்
பஞ்சரம் - கூண்டு
7 ஓரா - அறியாத
சூர் - சூரன்
துரம்தரன் - பாரத்தைத் தாங்குபவன்
8 மயல் - மயக்கம்
9 அயில் - கூரிய
மிடி - வறுமை
10 உகந்து - விரும்பி
12 சங்ராமப் - யுத்தம்
சிகாவலம் - மயில்
13 வாகா - அழகனே
14 தூசாம் (தூசு + ஆம்)- வெண்மை ஆகிய
ஆசா - ஆசை
நிகளம் - விலங்கு
அநுபூதி - அநுபவம்
15 சிந்தாகுலம் - மனக்கவலை
16 ஆறுஆறு-முப்பத்தாறு தத்துவங்கள்
சீறு - சீறி
18 சயிலம் - மலை
விரவும் - கலக்கும்
20 புனைதல் - அலங்கரித்தல்
கொன்னே - பயனில்லாமல்
24 பேழ்வாய் - பெருவாய்

## திருப்புகழ்

1 கப்பிய - உண்ட
கற்பகம் - விரும்பிய வற்றைக் கொடுக்கும் விருக்ஷம்
மத்தம் - ஊமத்தம்பூ
மட்டவிழ்-தேன்சொரிகின்ற
2 அபசாரம் - கெட்ட ஒழுக்கம்
இபமுகன் - விநாயகர் (இபம்-யானை)
இமவான் - இமயமலை
3 அசநம் - உணவு
உரகம் - பாம்பு
4 அவனி - பூமி
மதலை - பிள்ளை
குதலை-மழலைவார்த்தை
5 பூதி - விபூதி
மாழை - பொன்
மடங்கல் - ஊழித்தீ
அவுணன் - கஜமுகாசுரன்
6 திமிரம் - இருள்
உததி - கடல்
மிடி - வறுமை
சமரம் - போர்
சலதி - கடல்
பதலை - மலை
வெமரஅணை - வெவ்வியபாம்புப்படுக்கை



விழிகள்நளினன் - விட்டுணு
மிடறுகரியன்-சிவன்
7 சம்பு - சிவன்
அந்தரி - பார்வதி
பந்தம் - அழகு
சம்ப்ரமம் - வேகம்
தேவகுஞ்சரி - தெய்வயானை
ஆரூரர் - சுந்தரர்
பரி - குதிரை
வைகாவூர் - கொங்குநாட்டிலுள்ள தலம்
8 கேசவன் - விட்டுணு
அலைவாய் - திருச்செந்தூர்
9 விண்டு - விட்டு
விஞ்சையர் - புலவர், அறிஞர்
கலி - துன்பம்
குறமாது - வள்ளிநாயகி
10 சந்ததம்-எப்பொழுதும்
சஞ்சலம் - துன்பம்
தந்தியின் கொம்பு - தெய்வயானை (தந்தி - யானை)
சிவை - பார்வதி
கண்டி - சோழநாட்டிலுள்ள தலம்
11 சடம் - பொய்
கடகம் - கங்கணம்
தருணமிதையா - தருணம் இது ஐயா
அருணம் - சிவப்பு
தளம் - பூ இதழ்
12 போது - பூமாலை
வருடல் - தடவுதல்
காதும்-கெடுக்கப்பட்ட
சூதம் - மாமரம்
வாரி - கடல்
15 தந்தி - தெய்வயானை
17 அபயம்- அடைக்கலம்
18 முராரி - விட்டுணு
வாரி - கங்கை
விரவு - கலந்திருக்கும்
வேணி - சடை
கொடி - வள்ளிநாயகி
வாணி - வார்த்தை
வழுதி - பாண்டியன்
கூன் - வளைவு
21 அற்றை-அன்றைக்கு
அத்தம் - பொருள்
போதம் - அறிவு, ஞானம்
செகுத்தவர் - அழித்தவர்
25 காளம் - நஞ்சு
தோயம் - நீர்
நீபம் - கடம்பு
சிலைமகள்-உமாதேவி
கலைமகள் - சரஸ்வதி
திருமகள் - இலக்குமி
தினைவனமான் - வள்ளிநாயகி
கநவனமான் - தெய்வநாயகி
29 ஒறுத்தும்-வாட்டியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருகவர்க்கம்-தாரகனும் அவன் சாதியாரும்
பாணிகள் - கைகள்
தூவிகள் - அன்னங்கள்
30 மோது - குட்டிய
விரகு - ஞானம்
விமல - மலமில்லாத
சனகி - சீந்த
சதம் - எல்லாம்
இரணம் - போர்
காரி - நஞ்சு
இபதோகை - தெய்வயானை
31 விடுக - சீவிக்க
விழு-நன்மை, சிறப்பு
32 இருநோய் - நல்வினை தீவினை என்னும் நோய்கள்
பரவை - கங்கை
குலாவுதல் - கொண்டாடுதல்
33 வித்து - அறிவு
துப்பு - வலி
36 அமளி - படுக்கை
பவனம் - காற்று
சகளம் - வடிவம்
அயில் - வேல்
38 விடங்கல் - மலை
பசலை - வருத்தம், தேமல்
39 கனன்மால்வரை - அண்ணமலை
43 வேழம் - ஒரு நோய்
மிண்டர் - திண்ணியர்
நைந்து - வருந்தி
அமண் - சமணர்
45 ஆரணம் - வேதம்
46 நேமம் - காலம்
49 மாசர்-குற்றமுள்ளவர்
மாகம் - ஆகாயம்
ஏனல் - தினை
ஊனம் - உடம்பு
ஆலித்து - மகிழ்ச்சி அடைந்து
கர்ளம் - கருமை
துரங்கம் - குதிரை
சாகை - கிளைகள்
50 பாணி - கை
பிரதாபம் - ஒளி
மானர் - பெண்கள்
பாடீரம் - சந்தனம்
உலோகிதம் - சிவப்பு
சுசி - நெருப்பு
அர்க்கியம் -நீர்விடுதல்
சம்பிரதாயம் - பரம்பரை
அருச்சனை - பூசை
ஆவாகனம் - அழைத்தல்
அட்சமாலா - உருத்திராக்க மாலை
தரா - தரித்தவரே
ரதா - மகிழ்ச்சியை உடையவரே
தந்திரம் - நூல்
சிட்டம் - மேலானது



விருதம் - வளர்ச்சி
52 விஞ்சுதல் - மிகுதல்
விம்பம் - வடிவம்
53 சிந்து - கடல்
நந்து - சங்கு
உந்து - செலுத்தும்
சந்தம் - அழகு
54 குத்திரம் - இழிவு
வாணர் - அறிவாளிகள்
நிட்களம் - அருவம்
மூணு - மூன்று
பூகம் - கமுகு
வேளூர் - வைத்தீசுவரன் கோவில்
56 சுதை - மகள்
ஒருத்தல் - யானை
அவத்தன்-பொய்யன்
அசடு - குற்றம்
57 அல் - இரவு
புட்பதி - கருடன்
அச்சுதன் - விட்டுணு
59 குலாவிய - கொண்டாடுகிற
நிசாசரர் - அரக்கர்
அபிராமி-உமாதேவி
வேடை - விருப்பம்
60 எருவாய் - மலவாசல்
கருவாய்-கருப்பாசயம்
வெறி - பிசாசம்
உரம் - மார்பு
திருவீழி - சோழநாட்டிலுள்ள தலம்
61 கேள் - சுற்றம்
கொண்டல் - விஷ்ணு
62 முசித்தல் - மெலிதல்
தொந்தம் - தொடர்பு
வாளி - அம்பு
63 விரகு - உபாயம்
மோகனம் - மயக்கம்
64 கொட்டி - சிவன் ஆடிய கூத்து
65 பங்கேருகம்-தாமரை
மந்தாரம் - பஞ்ச தருக்களில் ஒன்று
சந்தாரம் - சந்தனமும், மணிவடமும்
மண்டு - மிகுதி
முகுந்தன் - விஷ்ணு
அரம்பை - (தெய்வப் பெண்), தெய்வயானை
66 வீதித்தல் - பகுத்து ஆராய்தல்
சற்காரம் - பெருமைப்படுத்தல்
67 அபிராமம் - அழகு
செச்சை - வெட்சி
68 அம்போருகம் - தாமரை
கொந்து - கோபம்
69 புற்புதம் - நீர்க்குமிழி
குடில் - உடல்
கற்பம் - ஊழிகாலம்
சற்பகிரி - திருச்செங்கோடு
கதை - தண்டாயுதம்
மூகர் - ஊமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழிமறையோன் - ஞானசம்பந்தர்
71 லிபி - எழுத்து
புண்டரீகன் - பிரமா
மேகநிறவன் -விஷ்ணு
அந்திபோல்உருவன் - சிவன்
அசபை-ஹஞ்ச என்னும் மந்திரம்
விபுதர் - தேவர்
மண்டு - நெருங்கி
முழை - மலைக்குகை
72 நீபம் - கடம்பு
சீமூதம் - மேகம்
வலாரி - இந்திரன்
அபிராமம் - அழகு
ஏழேழுபேர் - சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர்
ஆலவாய் - மதுரை
வீய - இறக்கும்படி
73 மகமாயி - உமாதேவி
ஆ - ஞானம்
ஊழி - உகமுடிவுக்குக் காரணராகிய கடவுள்
ஓசை - புகழ்
74 சாதா-தோன்றினவரே
சததளம்-நூறு இதழ்
சுரபதி - இந்திரன்
நீபம் - கடப்பம்
பவருஷ - ஆண்மை
பூதரம் - மலை
நிசாசரர்-இராக்கதர்

ஆகாரஆயன் - உடம்புடைய விட்டுணு
இரணியம் - பொன்
ஆகாரவேதன் - உடம்புடைய பிரமன்
வசு - அக்கினி
ஆகாரஈசன் - உருத்திரன்
வனசரர் - வேடர்
75 அல்லி - ஆம்பல்
அல்லல் - துன்பம்
சமன் - யமன்
உழை - மான்
76 தவளம் - வெண்மை
திவளும் - அசையும்
77 துரியம் - மேலானது
நூறி - கொன்று
வீற - கிழிய
இதண் - பரண்
78 வித்தகன் - சாதுரியன்
79 கட்கம் - வாள்
புவனேசை - உமாதேவி
யாப்பு - யாப்பிலக்கணம்
80 பிரகிருதி - பஞ்சபூதம்
81 எத்தர் -ஏமாற்றுவோர்
84 வேள் - மன்மதன்
85 நலிதல் - வருந்துதல்
86 வஞ்சி - பெண்
87 விழல் - வீண்
88 காதி - கண்டித்து
ஆகத்து - உள்ளத்து
89 அண்மி - நெருங்கி



## முருகன் அர்ச்சனை

2 வாரிதி - கடல்
பதாகை-பெருங்கொடி
5 பன்னியர்-மனைவிமார்
9 பவம் - பாவம்
11 ஓலம் - அடைக்கலம்
12 சிற்பரன் - கடவுள்
மேவலர் - பகைவர்
விமலன் - கடவுள்
13 காமாரி - சிவன்
15 கீண்ட - கிழித்த
புவனம் - உலகம்
16 வெற்பு - மலை
குக்குடம் - கோழி
மஞ்ஞை - மயில்
அணங்கு - தெய்வப் பெண்

## புராணம்

3 முண்டகம் - தாமரை
மவுலி - முடி
4 மடங்கல்-சிங்கம் யமன்
6 நவை - குற்றம்
அலக்கண் - இடுக்கண்
7 செற்ற - அழித்த
10 கோலம் - அழகு
பரிசு - பண்பு
13 தாலு - நா
15 மதலை - மழலைப்பேச்சு

## பிள்ளைத்தமிழ்

1 தரங்கம் - திரை
சூல் - கருப்பம்
உழந்து - வருந்தி
வாலுகம்-வெண்மணல்
கான்ற - கக்கிய
கரடம் - மதம்பாய் சுவடு
விகட - வேறுபட்ட
தட - விசாலமாகிய
தந்தி - யானை
கூன் - வளைவு
தரளம் - முத்து
நித்திலம் - முத்து
தரம் - உயர்வு
2 பண்டி - வயிறு
குறுமூரல்-புன்னகை
களபம் - கலவைச் சாந்து
4 நறவு - கள்
கடைசிமகளிர் - மருத நிலப் பெண்கள்
கன்னல் - கரும்பு
8 வங்கம் - மரக்கலம்
தரங்கம் - திரை
மாமுகி - வடஅனல்
தவளாசலம் - வெள்ளியங்கிரி
9 கன்னல் - கரும்பு
அகவும் - ஆடும்
பிறழும் - பிரகாசிக்கும்
கஞ்சம் - தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 தேசிகம் - ஒளி
சமரப்பதி - போரூர்
11 பிறங்கு - விளங்குகின்ற
மன்பதை - உயிர்கள்
12 அரவு - பாம்பு
புகட்டி - உட்புகுத்தி
மாதவி - குருக்கத்திக் கொடி
ஆயம் - பெண்கள் கூட்டம்
வண்டல் - விளையாட்டு
13 விநயம் - உபாயம், பயிற்சி
கவின் - அழகு
சுதை - அமிர்தம்
சரதம் - அன்பு

## தனிப்பாடல்

1 கேயூரம் - மயில்
விம்பம் - வடிவம்
வச்சிரம் - வைரத்தினம்
2 கலியாது - வருந்தாது
3 அருணன் - சூரியன்
4 சிற்பரம் - கடவுள்
சலதி - கடல்
6 கடல்வண்ணன் - விட்டுணு
கஜானன் - விநாயகர்
விபுதர் - தேவர்
7 சைதன்யம் - அறிவு
சஞ்சிதம் - அநுபவித்தது போக மிகுதியாயிருக்கும் பழைய வினை
ஆகாமியம் - இப் பிறவியிற் செய்யும் புண்ணிய பாவங்கள்
பிராரப்தம் - முற்பிறப்பு வினை
வச்சிரபாணி - இந்திரன்
உரகம் - பாம்பு
9 வயங்கு - விளங்குகின்ற
10 தவ்விலா - குறைவிலாத
17 அறுவகைத் தாயர் - கார்த்திகைப் பெண்கள்
21 அலரி - சூரியன்
ஆண்டலை - கோழி
22 குந்தளம் - கூந்தல்

# பாட்டு முதற் குறிப்பகராதி

[எண் பக்கத்தைக் குறிக்கும்]


**அ**

அஞ்சன, 50
அஞ்சுமுகம், 13
அதிருங்கழல், 34
அந்திப்போ, 75
அபசார, 26
அயிலொத், 53
அராப்புனை, 18
அருவமும், 74
அல்லிவிழி, 63
அவனிதனி, 27
அற்றைக்கு, 36
அறமிலா, 54
அறுவகை, 93
அன்பாக, 59
அன்புடன், 91

**ஆ**

ஆங்கார, 16
ஆதிமகமாயி, 62
ஆயிரகோடி, 76
ஆருக்கு, 89
ஆலுக்கணி, 17
ஆரூறையும், 23
ஆறிருதடம், 73
ஆறுமுகம், 27
ஆறுமுகம்தோ, 25
ஆனைமுகவற், 47

**இ**

இசைந்தஏறு, 68
இத்தரணி, 67
இரவுபகற், 43
இரவும்பகலு, 23
இருந்தவீடும், 55
இருமூன்று, 7
இருவர், 43
இருவினை, 38
இருவினைப்பி, 60
இருவினைமங், 43
இருளும், 41
இல்லறத், 93
இறவாமற், 35
இன்னம், 13

**ஈ**

ஈசனை, 76

**உ**

உரத்துறை, 52
உருகாமனம், 79
உருவாய், 23
உலகத்தின், 71
உலகம், 1
உலகடங்க, 88
உன்னை, 13

**ஊ**

ஊரிலான், 76

**எ**

எங்கணும், 76
எண்ணிய, 93
எண்ணிலாத, 92
எத்தனைகோ, 51
எத்திக்கும், 56
எதிரிலாத, 35
எந்தாயும், 23
எந்நேரம், 24
எந்நேரமும், 24
எருவாய், 84
எவ்வுயிர், 91
எழுகடல், 40
எள்அத்தனை, 77
என்னல்பிற, 55

**ஏ**

ஏறுமயில், 42

**ஐ**

ஐந்துபூதமும், 60
ஐந்துமுகர், 95

**ஒ**

ஒருமையுடன், 86

**ஓ**

ஓங்கும், 38

**க**

கண்ணல், 80
கண்ணேறு, 87


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்துங், 77
கதிதனை, 19
கந்தநம, 72
கந்தநாயக, 72
கந்தனே, 89
கந்தாசரண, 73
கருத்கினுல், 56
கருத்தே, 82
கருமலை, 72
கருவினுரு, 26
கலந்தமாது, 68
கலைமடவார், 37
கலைமேவு, 48
கன்னற்குத, 81
கனகசபை, 40

கா
காக்கக், 13
காடும்மலையு, 24
காணெணுத, 64
காதிமோதி, 69
காரணமதாக, 33
காலனிடத்து, 33
காவிக்கமல, 19
காவிஉடுத்து, 39

கு
குகனே, 96
குன்றம், 12
குன்றம்எறி, 12

கூ
கூர்கொண்ட, 18
கூர்வேல், 73
கெடுவாய், 20

கை
கைத்தருண, 42
கைத்தல, 25
கைவாய், 21

கொ
கொள்ளித், 19

கோ
கோடாத, 18
கோலமா, 75
கோவினை, 70
கோழிக்கொ 14

ச
சத்திபாணீ, 50
சந்ததம், 31
சரணகம, 31
சரவண, 63
சாகா, 22

சி
சிங்கார, 22
சிந்தனை, 97
சிந்திக்கிலே, 16
சிந்துற்று, 51
சிரத்தான், 46
சிவமாது, 45
சிவமே, 72
சிறுதினை, 9
சினத்தவர், 37

சீ
சீர்க்குமரேச, 75
சீர்மேவு, 94
சீரானகோல, 61
சீரைநை இய, 5

சு
சுத்தசைதன், 90

சூ
சூழுதல், 76

செ
செங்கலச 39
செம்மான், 20

சே
சேந்தனை, 17
சேல்பட்டு, 15

ஞா
ஞானம், 25

த
தண்டாயுதம், 15
தவப்ரியம், 52
தவளமதி, 64
தற்பரஞ், 88

தி
திமிரஉததி, 28
திரிபுரம், 44
திருமகள், 34
திருவடி, 19
திருவாவி, 97

து
துய்யதோர், 73
துள்ளுமத, 68
தூசாம், 22
தெய்வத்திரு, 14

தே
தேமாங்கனி, 83
தேவர்கள், 72
தேவே, 80
தேனியல், 86
தேனென்று, 41





ந
நக்கீரர், 13
நங்கட்கினி, 85
நச்சர, 36
நடவுங், 88
நண்ணினர்க், 72

நா
நாடித்தேடி, 46
நாதவிந்து, 29
நாதாதருக, 96
நாயேன், 93
நாள்என், 15

நி
நித்தமும்ஓது, 52
நினைத்த, 36

நீ
நீதத்துவ, 48
நீதான், 45
நீலச்சிகண், 15

நெ
நெஞ்சக்கல், 20

ப
பகல்இர, 50
படிக்கின், 18
பணிப்பகை, 94
பத்தித், 16
பத்தியால், 67
பந்தாடி, 57
பரங்குன்றி, 13
பரிந்த, 70
பன்னிருகர, 71
பன்னிருவிழி, 71

பா
பாடாத, 94
பாதிமதி, 32
பால்என்பது, 15
பாலே, 16
பாழ்வாழ், 22

பி
பிறவிஅலை, 67

பு
புத்தியை, 16
புற்புதம், 59
புன்நெறி, 75

பூ
பூத்தார்சூடும், 61
பூவேபூவில், 82

பெ
பெரியோர், 24

பே
பேராசை, 21
பேராதரிக், 78

பை
பைங்கொடி, 8
பைந்தண், 78

பொ
பொன்னை, 69

போ
போக்கும்வர, 17

ம
மண்ணின், 91
மதியால், 65
மருவே, 32
மறைகளின், 75
மன்உயிர், 96
மனைமக்கள், 69

மா
மாமேவு, 87
மாயையின், 75
மாலுலாம், 70
மாலோன், 19

மு
முடியாமுத, 85
முண்டகம, 74
முந்தியபொ, 71
முருகன், 21
முருகனே, 13
முருகாஎன், 93
முழுமதி, 74

மூ
மூவர்கள, 74
மூஇருமுகங், 71

மெ
மெய்யே, 22

மை
மைச்சரோ, 86
மைவருங், 18

**மோ**
மொய்தார், 14
**யா**
யாமோதிய, 21
**வ**
வங்கத்தரங், 81
வடிவும், 21
வரங்கொண், 94
வரியார், 30
வள்ளமுலை, 48
**வா**
வாசித்துக், 49
வாதினை, 33
வாழ்வார், 24
வானோர், 47
வானே, 20
**வி**
விண் ஆள், 23
விந்ததினூறி, 30
விரிஞ்சன், 74
விழிக்குத், 17
**வீ**
வீரவேல், 13
**வெ**
வெட்டுங், 17
வெண்சா, 84
வெற்பென, 53
**வே**
வேதத்தின், 87
வேதவெற்பு, 58
வேலனே, 92
வேழம்உண், 46
**வை**
வைந்நுதி, 4

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 23 | 10 | தாள் | தாழ் |
| 38 | 22 | அறுமுக | ஆறுமுக |
| 47 | 6 | இராமேஸ்வரம் | இராமேசுவரம் |
| 50 | 15 | காலா | கலா |
| 51 | 8 | சீர்காழி | சீகாழி |
| 57 | 6 | பாண் | பண் |
| 65 | 19 | குமாரா | குமரா |
| 66 | 20 | செற்றவன் | செற்றவள் |
| 78 | 26 | வைத்திஸ்வரன் | வைத்தீசுவரன் |
| 85 | 16 | புனனே | புயனே |
| 93 | 15 | நையாங் | நையார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசுவாமிப் புலவரவர்கள் இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| தண்டியலங்காரப் புத்துரை | .... .... | 3 - 0[illegible] |
| யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | .... | 2 - 5[illegible] |
| அகப்பொருள் விளக்கப் புத்துரை | .... | 2 - 2[illegible] |
| சிசுபால சரிதம் | .... .... | 1 - 0[illegible] |
| இரகுவமிச சரிதாமிர்தம் | .... .... | 7[illegible] |
| இதோபதேசம் | .... .... | 6[illegible] |
| ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் | .... | 2[illegible] |
| கலைசைச்சிலேடைவெண்பா (அரும்பதவுரை) | | 2[illegible] |

**தோத்திர மஞ்சரி :** (இரண்டாம் பதிப்பு)

இது, சுன்னுகம் கு. முத்துக்குமாரசுவாமி[illegible] பிள்ளை B. A., அவர்களால் தொகுக்கப்பெ[illegible] றது. இதில், தேவாரம், திருவாசகம்[illegible] திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திர[illegible] திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம்[illegible] பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாட[illegible] முதலிய பல நூல்களிலிருந்து எடுக்கப்பெற்[illegible] பக்திரசம் ததும்பும் 500 பாடல்கள் உள்ள[illegible] உயர்ந்த 'கிளேஸ்' காகிதத்தில் அழகு[illegible] அச்சிடப்பட்டது. விலை ரூ. 1 - [illegible]

புலவரகம்

மயிலணி : சுன்னுகம் P. O.

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org